REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

சுதேசி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னகம் — வியா — வைகாசி சு, 19-5-'46 — ஞாயிறு | இதழ் 41

JAFFNA COLLEGE LIBRARY, MAY 20 1946 VAIDDODDAI, CEYLON

கட்சிகளின் தடுமாற்றம்

தலைநகரிற் குதூகலம்

[கொழும்பு நிருபர் கடிதம்]

பூர்ண பௌர்ணமித் தினத்தன்று கொழும்பு வீதிகள் தீபாரலங்காரத்துடன் சோபித்தன. நாலைந்துவருடங்களின் பின் இப்படியான ஒருகாட்சியை இம்முறைதான்கண்டு மகிழ்ந்தோம்.

புத்தபகவான் அவதாரஞ் செய்த இப்புனிதத்தினம் பொதுவாக இலங்கை மக்களுக்குஞ் சிறப்பாகச் சிங்களச் சகோதரர்களுக்கும் குதூகலத்தையும் ஆனந்தத்தையும் ஊட்டுவதாகும் இச்சுபதினத்திற் புதிய அரசியல் திட்டத்தின் பிரமாணச் சட்டம் மன்னர்பிரானின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டது. பௌத்த மதம் வளர்ச்சியுறுவதற்கு இது ஓர் அறிகுறியென இங்குள்ள பௌத்தர்கள் தீர்க்கமாக நம்புகின்றனர். யுத்தகாலத்துக் கட்டுப்பாடுகள் இப்போது தளர்த்தப்பட்ட காரணத்தால், விசாகத் திருநாள் இவ்வருடம் ஆடம்பரங்களுடனும் பொலிந்து விளங்கியது. தூய வெண்ணிற உடைகளைத் தரித்துப் புஷ்பங்களுடன் மக்கள் சென்ற காட்சி உள்ளத்துக்கு ஒரு கணம் அமைதி அளித்தது. புதன் கிழமை இரவு நகரத்தின் முக்கிய வீதிகள் ஜோதிமயத்தில் மூழ்கிக் கிடந்தன.

50 : 50 படுதோல்வி

இத்தனை குதூகலத்துக்குமிடையில் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் மனக்கிலேசம் உண்டாக்கும் ஒரு செய்தியைப் பெற்றிருக்கின்றது. குடியேற்ற நாட்டு மந்திரிக்கு தமிழர் காங்கிரஸ் இலங்கை அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பித்திருந்தது, அநேகருக்கு ஞாபகமிருக்கலாம். இதை நன்கு ஆராய்ந்த பின் குடியேற்றநாட்டு மந்திரி ஸோல்பெரித் திட்டத்தில் எவ்வித மாற்றமுஞ் செய்ய முடியாதெனத் தெரிவித்திருக்கின்றார். இலங்கை அரசியற் சீர்திருத்தம்பற்றிப் பிரிட்டன் செய்த முடிபுகள் அரசாங்க சபையில் அதிகமான வாக்குகளால் நிறைவேறியதாகவும், ஏழு தமிழ் அங்கத்தவர்களுள் ஐந்து பேர் வெள்ளை யறிக்கைக்குச் சாதகமாக வாக்களித்தனர் எனவும் குடியேற்றநாட்டு மந்திரி பொதுமக்கள் சபையிற் கூறியிருக்கின்றார்.

பண்டாவின் திருப்தி!

தமிழர் காங்கிரஸ் ஏதோ வெட்டி வீழ்த்தப் போவதாகவே இப்போதும் சத்தம் போடுகின்றது. ஆனால் அதன் சகபாடியான சிங்களமகாசபை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து கொள்ளத் தயாராகிக்கொண்டது. புதிய கட்சியின் தலைவராக ஸ்ரீ சேனநாயகா பிரகாசிக்க வேண்டுமென்பதையும் சிங்களமகாசபைத் தலைவர் மனப் பூர்வமாக வரவேற்கின்றார். "நீதியாகவும், நியாயமாகவும் ஸ்ரீ. சேனநாயகா நடந்து கொள்வர் என அறிகின்றேன். இது எனக்குத் திருப்தி அளிக்கின்றது" என ஸ்ரீ பண்டாரநாயகா தெரிவித்திருக்கின்றார். நீண்ட நேரம் இது சம்பந்தமாக ஸ்ரீ பண்டாரநாயகா ஸ்ரீ சேனநாயகாவுடன் பேசிய பின்னர்தான் இத்தகைய முடிபுக்கு வந்திருக்கின்றார்.

இதில் ஏதோ சுழியோட்டங்கள் நிகழ்ந்திருக்க வேண்டுமென்ற கதை அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றது. ஸ்ரீ சேனநாயகா அமைக்கும் மந்திரிசபையில் ஸ்ரீ பண்டாரநாயகா இடம் பெறுவதுடன் கல்விமந்திரி ஸ்ரீ கன்னங்காராவுக்கும் கண்டிப்பாக ஓர் இடங் கிடைக்குமெனத் தெரிகின்றது. ஸ்ரீ. கன்னங்கரா சிங்கள மகாசபையின் உபதலைவர்; பண்டாவின் உற்ற நண்பன். ஸ்ரீ சேனநாயகாவுக்கு இப்போதெல்லாம் ஸ்ரீ கன்னங்கராவைக் கண்ணிலே காட்டக் கூடாது! கல்வி மந்திரியின் இலவசக்கல்வித் திட்டம் விவசாய மந்திரிக்கு வேப்பங்காய் மாதிரி. இந்த இலட்சணத்தில் புதிய பார்லிமெண்டில் பிரதம மந்திரியாகப் பதவி வகிக்கப் போகும் ஸ்ரீ சேனநாயகா ஸ்ரீ. கன்னங்காராவைத் தனது கழ்பனியிற் சேர்க்கமுடியாதென நிற்பது நூதனமல்ல. சிங்கள மகாசபைத் தலைவர் ஸ்ரீ சேனநாயகாவை ஆதரிக்க முன்வந்த காரணத்தால் கன்னங்காராவுக்கும் வாய்ப்பாகிவிட்டது. தமிழ்க் காங்கிரஸ் தலைவரையும் தன்பக்கஞ் சேர்க்குஞ் சக்தி பண்டாவுக்கு உண்டென நம்பப்படுகின்றது, அப்படியானால் ஸ்ரீ. ஜி. ஜி. அவர்களையும் அவர் தன்னோடு சேர்த்துக்கொண்டு புதிய கட்சியான ஐக்கிய தேசிய முன்னணிக்குப் பூரண ஆதரவு உதவலாம்! அரசியற் குறும்புத்தனங்களை யார் அளந்து கட்ட முடியும்?

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தேடும் ஸ்ரீ மொலமூரே அவர்களின் யாழ்ப்பாண விஜயத்தைக் குறித்த ஆங்கிலப் பத்திரிகையான 'டைம்ஸ்' நியாயமானமுறையிற் சிலசந்தேகங்களையும் கிளப்பியிருக்கின்றது. கட்சியின் நோக்கங்களையும் திட்டங்களையும் தெரிவிக்காது புதிய கட்சியிற் சேரும்படி ஸ்ரீ மொலமூரே கூறுவது முறையல்ல வென்பது டைம்ஸ் கட்சி. புதிய அரசியலில் வகுப்புவாதிகளுக்கு இடமில்லையென்பது சகல மக்களும் அறிந்த விஷயம். ஆனால் கண்களை மூடிக்கொண்டு புதிய கட்சிகளிற் சேர ஒருவரும் முற்படமாட்டார்கள். நோக்கங்களைத் தெரியாது 'எங்கள் கட்சியிற் சேருங்கள்' என்று சொல்லுவது அரசியல் தர்மமாகாது. பிரித்தானிய பார்லிமென்டை ஒட்டியே ஸோல்பெரித் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாற் பலமான கட்சிகள் அவசியமாகின்றன. தனித்த ஒரு கட்சி தோன்றுமாயில் அது சர்வாதிகாரம் செலுத்துமென்பதும் உண்மை. ஆகவே, நிதானமான அரசியற் கொள்கைகளைக் கொண்ட முற்போக்குக் கட்சி தோன்றுமாயில் அது இலங்கை மக்களின் ஆதரவைப் பெறுமல் இருக்க முடியாது.

புதிய சம்பளத் திட்டம்

சம்பள நிர்ணயச் சபையின் திருத்தமான திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியாயிற்று. 264 பக்கங்கள் கொண்ட இவ்வறிக்கையின் விலை ஐந்து ரூபாய் முப்பது சதம். வரியுந் தவறுமல் இவ்வறிக்கையை அரசாங்க உத்தியோகஸ்தர்களும் ஏனையோருங் கவனமாகப் படிக்கின்றனர்.

இத்திட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்துக்கு மேலதிகமாக ரூ. 5,14,00000 செலவாகும். சகல சம்பள விகிதங்களும் மூன்றில் ஒருபங்கு உயர்த்தப்பட வேண்டுமென நிர்ணய சபை கருதவில்லை. ஆனால், யுத்தத்துக்கு முந்திய சம்பளத்திட்டத்தில் மூன்றிலொரு பங்கு உயர்த்தப்பட்டிருப்பதாக அறிக்கை கூறுகின்றது. இலங்கை அரசாங்க லிகிதர்கள் பெருந் தொகையிலை ராகையால் இவர்களின் சம்பள உயர்வு அரசாங்கத்தின் மொத்தச் செலவைப் பெருவாரியாக அதிகரிக்கத்தான் செய்யும். ஆகவே, லிகிதர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை சபையின் முக்கிய கவனத்தைக் கவர்ந்திருக்கின்றது. லிகிதர்கள் பெரும் தொகையின ராகையால் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிக்கை கூறுகின்றது. சரி, அப்படியானால் ஆசிரியர்கள் ஆயிரக்கணக்காகப் பல்கிப் பெருகியிருக்கின்றனர். இவர்கள் கதியென்ன? இவர்கள் போதும் போதுமெனப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வெள்ளி விழாப் பொன்நகர்

ஒளிவெள்ளத்திற் கலையும் கானமும்

'சமுகேசரி' விசேஷ நிருபர்

பரமேஸ்வரக் கல்லூரி வெள்ளிவிழாப் பொன்நகரம் ஜெகஜோதியாகப் பிரகாசிக்கின்றது. உல்லாசப் பொழுதுபோக்குக்கும் கண்கவர் வனப்புகளுக்கும் உறைவிடமாகத் திகழும் கல்லூரி முன்றிலில் இந்திரலோகம்போலக் காட்சியளிக்கின்றது. கலையும் கானமும் களியாட்டு விழாவின் முக்கிய அம்சங்கள் என்று கூறிவிடலாம்.

யாழ்ப்பாணம் பரமேஸ் வரக்கல்லூரி வெள்ளிவிழாக் கொண்டாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (14-5-46) ஆரம்பமாயிற்று. தேசாதிபதி அவர்கள் களியாட்டு விழாவை அன்று பிற்பகல் திறந்து வைத்தார். "இலங்கை மாதாவின் மாபெருந் தலைவர்களில் ஒருவராகிய சுவர்க்கவாசி சேர் பொன் இராமநாதன் அவர்கள் இக்கல்லூரியை ஸ்தாபித்தார். அப்பெரியாரின் நூற்றாண்டு விழா நிகழ இன்னும் ஐந்து வருடங்கள் இருக்கின்றன. அக்கொண்டாட்டத்துக்கு முதற்படியாக இவ்விழாவை பரமேஸ்வரா — இராமநாதன் கல்லூரிகளின் பழைய மாணவரும் மாணவிகளும் ஏற்படுத்தியிருக்கின்றனர். பொதுவாகத் தமிழருக்குஞ் சிறப்பாக இலங்கை இந்துக்களுக்கும் இக்கல்லூரிகளின் இலட்சியங்களை நினைவுறுத்துவதே இக்கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கம்" என்று கல்லூரி அதிபர் ஸ்ரீ நடேசன் தேசாதிபதியை வரவேற்றுப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

சேர் இராமநாதன் தமது நுண்ணறிவையும் நாயகத் தன்மையையும் இலங்கையின் சேவைக்காகத் தியாகஞ் செய்த உத்தமன். வகுப்புவாதம் என்ற வரம்புக்குள் நிற்காது நாட்டின் முற்போக்குக்கு உழைத்ததுடன் சைவத் தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகவும் பணிசெய்த பெரியார். சமயபோதனை கல்விக்கு உயிர் போன்றது என்பதை நன்கு உணர்ந்தவர். இந்த நோக்கத்துடன் தான் அவர் இராமநாதன் கல்லூரியையும் பரமேஸ்வரக் கல்லூரியையும் ஸ்தாபித்திருக்கின்றார்" எனத் தேசாதிபதி தமது பேருரையிற் கூறினர்.

கல்லூரி வெள்ளிவிழாவைத் திறந்துவைப்பதற்கு அறிகுறியாகத் தேசாதிபதி அவர்கள் ஒரு மணியைக் கிலுக்கினர். வெள்ளியாற் செய்யப்பெற்ற, இம்மணி பல்லவர் காலத்து வேலைப் பாட்டை நினைவுறுத்தியது. கி. மு. ஏழாம் நூற்றாண்டில் பல்லவ ஆட்சி தென் இந்தியாவில் அதி உன்னத நிலையிலிருந்தது. அக்காலத்து மணி ஒன்றின் அமைப்புக் கேற்ப, கொழும்பு ஸ்ரீ சண்முகநாதன் அவர்களின் உதவி யுடன் இம்மணி செய்யப்பெற்றது. இதை ஸ்ரீ நடேசன் தேசாதிபதி அவர்களுக்கு அளித்தார்.

போருட்காட்சிகள்

அரசாங்கத்தினர் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடவில்லை. உணவு அபிவிருத்திப் பகுதி சுகாதாரப்பகுதி, தேசிய சேமிப்புப் பகுதி, இலங்கைப் புகையிரதப்பகுதி, யந்திரத் தொழிற்பகுதி, கைத்தொழிற்பகுதி, வடபகுதி ஐக்கியசங்கம், தெங்குப் பொருள் அபிவிருத்திச் சங்கம், அரசாங்க கிருஷிப்பகுதி போன்ற சகல விதபொருள் சங்கங்களும் தொழில் ஸ்தாபனங்களும் இயக்கங்களும் இவ்விழாவுக்கென ஏற்படுத்தப்பட்ட பொருட் காட்சியிற் பங்குபற்றுகின்றன.

'பிளவுட்' என்று சொல்லப்படும் ஒட்டுப் பலகைகளாற் செய்யப்பெற்றுக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அலமாரி, கண்ணாடி மேசைபோன்ற மரச்சாமான்கள் பலருடைய கவனத்தையும் இழுக்கின்றன. சோடனைக்குஞ் சீலிங் அடிக்கவும் இவை மிகவுஞ் சிறந்தன. ஒட்டுப் பலகைகள் செய்வதற்கு இலங்கையில் 40 வித மரங்கள் இருப்பதாகத் தெரிகின்றது.

புத்தூரில் உள்ள அரசினர் பட்டுப் பண்ணைப் பகுதியினர் இலங்கையிற் பட்டு உற்பத்தி செய்யலாமென்பதை உணர்த்துகின்றனர்.

சித்திரக்காட்சி

கல்லூரி மேல்மண்டபத்தின் ஒரு பகுதியிற் சித்திரக்காட்சி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ. எஸ். ஆர். கே. நீட்டியிருக்குஞ் சில சித்திரங்கள் குறிப்பிடத்தக்கன. பால் மேல்மண்டலம் என்பன இராமநாதன் நகரத்தின் அங்கங்கள். ஈழமண்டலத்தில் இன்னிசை அனுபவித்து உல்லாசமாகப் போது போக்கலாம். சோழமண்டலத்தில் பலவிதமான பளிங்குக் காப்புகளும் தந்தத்தாற் செய்யப்பெற்ற அற்புதப் பொருள்களும் அருமையான சிலைகளும் நிறைந்திருக்கின்றன. வண்ண வண்ணச் சேலைகளையும் தோலாற் செய்யப்பெற்ற அழகான பொருள்களையும் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு வேண்டிய உபகரணங்களையும், மண்டலத்திற் கண்டு களிக்கலாம், காசு கொடுத்தும் வாங்கலாம். நாவிற்குகந்த ஊறுகாய்வகையரூவும், இனிய பழாசங்களும் சேரமண்டலத்தில் அபரிமிதமாகக் கிடைக்கும்.

'உல்லாச பவன்'

நண்பர்களுடன் நயமாகப் பேசிக்கொண்டு இனிய சிற்றுண்டியை இதமாக அனுபவிப்பதற்கு உல்லாச பவன் எல்லோரையும் எற்கின்றது. 'ஐஸ்காப்பி'யும் பட்சணவகைகளும் மித்திரபேதமின்றி மதுரமாக விருக்கின்றன. பெண்மணிகள் வாழ்க!

உல்லாசப்பவனி

உல்லாசமாகச் சுழன்று வருவதற்கு மாக் குதிரைகளில் ஏறி மகத்துவத்துடன் இருக்கலாம். இன்னிசை சகிதமாக சுற்றிச் சுழலும்போது இந்திரலோகத்தில் இருப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படத்தான் செய்யும். முறுக்கான வாலிபரும், முறுவல் செய்யும் மகளிரும், முதியோருடன் சேர்ந்து உல்லாசப் பவனி செல்லுங் காட்சி நேரிற் கண்டுபார்க்கவேண்டியது.

ஆகாச வெளியில் நாதஸ்வரத்தின் நாதமும் மின்சார வெளிச்சங்களின் வர்ண ஜாலமும் ஒரு புறமிருக்கக் கல்லூரி ஆலயத்தின் கோபுரம் கண்களைப் பறிக்கின்றது.

ஆடல் பாடல்

பள்ளிக்கூடப் பிள்ளைகளின் ஆடல் பாடல்களும் ஒழுங்கு செய்யப்பெற்றிருக்கின்றன. இவற்றினும் மேலாகப் பந்த நல்லூர் ஜயலட்சுமியின் பரதநாட்டிய அபிநயக் கச்சேரியும், சந்திரசேகரன் கோஷ்டியாரின் கதாகளி நடனங்களும் வெள்ளி விழாவை ஓளவுக்கு உயர்த்தி வைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ண பரம்பரை

● கொண்டோடி ✡

● ஒன்றுபட்டாலுண்டு வாழ்வாம்.

✡ இதனைப்பாடியவர் ஒரு இந்திய மகாகவியாம்.

✡ இப்பொழுது அனேகர் இதனைப் பாடிக்கொண்டு திரிகின்றார்களாம்.

✡ பெரும்பாலன மக்களுக்கு இதனின் பொருள் இப்போது தான் தெரியவருகிறதாம்.

✡ அதனைப் பல்லவியாகவும் பாடத்தொடங்கி விட்டார்களாம் பலர்.

● இப்பல்லவியைக் கேட்டு அஞ்சுபவர்களும் உண்டாம்.

✡ இவர்கள்தான் அடக்கியாளும் வர்க்கத்தினராம்.

✡ இவர்களுக்குத் தூபதீபமிட்டுவந்தவர்களின் பாச்சாவும் பலிக்கவில்லையாம்.

✡ இந்தியாவில் இப்பல்லவியின் பலன் கைமேற்கிட்டப் போகின்றதாம்.

✡ அடக்கியாளும் வர்க்கத்தினர் அடங்கிவாழும் மக்களாகப் போகின்றனராம்.

● இப்பல்லவியின் மகத்துவத்தை இலங்கை மக்கள் இன்னும் உணரவில்லையாம்.

✡ ஆசிரியர்கள்தான் மக்களின் வழிகாட்டிகளாம்.

மற்றவர்களுக்குப் போதிப்பதல்லாது சாதனையிற் கொண்டுவர இவர்களால் முடியாதாம்.

✡ இல்லாது போனால் அரசாங்கம் இவர்களை இவ்வளவிற் புறக்கணிக்கமாட்டாதாம்.

✡ படி சம்பந்தமாக இவர்கள் கீழ்ப்படியில் வைக்கப்பட்டுள்ளார்களாம்.

✡ இப்போதுதான் சாதனையிற் சாதிக்க முயல்கின்றார்களாம்.

✡ அப்படிச் சாதித்து விட்டால் 30,000 சுவபாஷா ஆசிரியர்கள் தொழில் நிறுத்தஞ் செய்வார்களாம்.

✡ இது நீண்டுவிட்டால் மாணவர்களின் படியும் ஒன்று குறையக் கூடுமாம்.

● புதிய சம்பளத் திட்டம் சென்ற ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வருமாம்.

✡ இதற்குப் பொதுஜனங்களின் பணத்தில் ரூபா 9,31,11,250-00 மேலதிகமாக எடுக்கப்படுமாம்.

✡ இத்திட்டத்தைப் பங்கு போட்டவர்கள் சரியாகப் போடவில்லையாம்.

✡ விகிதாசாரப்படி பங்கு போடப்பட வில்லையென்பது தானும் ஒரு பெருங்குறை.

✡ சிலரின், பழைய சம்பளத்துக்கும் புதிய சம்பளத்துக்கு மூள்ள வித்தியாசம் ஆனைக்கும் பூனைக்கும் போல இருக்கின்றதாம்.

✡ இதிற் பூனைகளாக இருப்பவர்கள் சுவபாஷா ஆசிரியர்கள் தானும்.

● அரசாங்கசபை 'கள்ளவரின் குகை' யென்றவரிற் தகுந்த நடவடிக்கை யெடுக்கவேண்டுமாம்.

✡ இதனை ஆவேசத்துடன் கூறினராம் ஒரு பிரதிநிதி.

✡ இதற்கு, தலைநாயகாவா சனைத்து நிற்பவர்.

✡ கள்ளக் கூட்டத் தலைவரையும் இப்பொழுது நியமித்து விட்டாராம்.

✡ நிரு. சேனநாயகாதானும் அலிபாபா.

✡ அடுத்தபடியாக, 40 கள்வர்களையும் நியமிக்கச் சந்தர்ப்பமளிக்கப்படுமோ.....?

239-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

வெளி ஊர்களில் மொத்த வியாபாரப் பங்கிடுகாரராக வேண்டி வியாபாரிகளிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா வென்பதைச் சகலருக்கும் இதனூலறியத் தருகிறேம். இனிவரும் விண்ணப்பக் கடிதங்கட்கு மறுமொழி அனுப்பப்படமாட்டாது.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 8-5-1946 [2760]

240-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

கைத்தறி நெசவான புடவைகளை இறக்குமதிசெய்யும் வெளி ஊர் இறக்குமதியாளருக்கு

கைத்தறி நெசவான புடவைகளை இறக்குமதி செய்யும் கொழும்புநகரத்துக்கு வெளியே உள்ள வியாபாரிகள் இனிமேற்பட்டு அவ்வகையான பண்டங்களைச் சுங்க சாலையினின்றும் அகற்றிய உடன் அவ்வவ் இடப்பரப்புக்குரிய உதவிப் புடவைக் கட்டுப்பாட்டதிகாரிக்குத் தெரிவிப்பார்களாக. அவர்கள் வார்நாமாவிலிருந்து சில மாதிரிகளைத் (சாம்பிள்) தெரிந்து புடவை விலை குறிக்கும் பகுதியைச் சார்ந்த உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு நிச்சயிக்கும் பொருட்டு அனுப்பி வைப்பார்கள். சொல்லப்பட்ட அதிகாரிக்கு சொல்லப்பட்ட மாதிரிகளை (சாம்பிள்), சம்பந்தப்பட்ட சாதனங்களை விலை குறிக்க விண்ணப்பிக்கும்போது கொடுக்கையில், அல்லது அவ்விண்ணப்பஞ் செய்த உடனே அனுப்பி வைக்கவேண்டும்.

அவ்வவ் இடத்துக்குரிய கட்டுப்பாட்டதிகாரியின் அதிகாரம் பெற்றல்லாமல் எக்காரணத்தையிட்டும் மாதிரிகள் அனுபபுதல் கூடாது. அவர் ஒவ்வோர் மாதிரியையும் ஏற்றுக்கொள்ளலைக் காட்டுவார்.

எப்படியென்றாலும் விலை அடையாளம் இடும் அலுவலக அலுவலாளர் கொழும்பு இறக்குமதியாளரின் வார் நாமாவிலிருந்து மாதிரியை எடுப்பார்கள்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 9-5-1946 [2761]

34-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை
மேல்மாகாண வாரம்

1945 ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ந் திகதியைக்கொண்ட 9-ம் கட்டளையைப் பின்வருமாறு திருத்தஞ் செய்கிறேன்.

மேல்மாகாண வாரத்தில் மொத்த வியாபாரிகள் கட்டுப்படுத்தப்பட்ட புடவைகளை (கொழும்பு நகராண்மைக் கழகம் முனிசிப்பாலிட்டி தவிர) களுத்துறை கொழும்பு கோட்டகங்களில் உள்ள சில்லறை வியாபாரிகட்கு, அவ்வாரத்தின் திங்கள் செவ்வாய் புதன் கிழமைகளிலும், கொழும்பு நகராண்மைக் கழகத்திலுள்ள சில்லறை வியாபாரிகட்கு அவ்வாரத்தின் ஏனைய நாட்களிலும், விற்பார்கள்.

இக்கட்டளை 1946-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி துவங்கும் மேல்மாகாண வாரத்துடன் வலுவு பெறும்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 10-5-1946 [2766]

தமிழ் அன்பர்களுக்கு அறிக்கை

தமிழ் முன்னேற்றத்திற்காக ஓர் "இசைத்தமிழ் நிலையம்" உடுவிலில் சங்கீதபூஷணம் (அண்ணாமலை சர்வகலாசாலை) N. சண்முகரத்தினம் அவர்களால் தொடங்கப்பட்டிருக்கிறது

இந்நிலையத்தில் மாணவர்களுக்காக உயர்தர சங்கீதம் கற்பிக்கப்படும். தற்போது மாணவர்களின் வசதிக்கேற்ப சுன்னாகம், நாச்சிமார்கோவிலடி (யாழ்ப்பாணம்), யாழ்ப்பாணம், சங்கானை ஆகிய இடங்களிலும் வகுப்புகள் நடத்தப்படும்.

கற்க விரும்பும் மாணவர்கள் நேரிலும் கடிதமூலமும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

N. சண்முகரத்தினம்
உடுவில்.

5-1946. [2751—iii]

புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

புகையிலை

கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

COLOMBO COMMERCIAL CO., LTD.

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2748]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய அரங்கம்

இராம இராச்சியம்

தருமமே இராச்சியத்தின் அடிப்படை. இங்கு இராம இராச்சியத்தின் சிகரமாகிய தருமத்தின் உயர்வு ஆராயப் பட்டிருக்கின்றது.

தர்மம்

அ. சீனிவாசராகவன்

இங்கே வரும்பொழுது கடைத்தெரு முனையில் தீனக் குரலொன்று காதில் விழுந்தது. திரும்பினேன். பிச்சைக் காரன் ஒருவன் வீதிப்புழுதி யில் தள்ளாடிக் கொண்டிருந் தான். பங்குனி வெயிலின் கொடுமையை வென்ற அவன் சோகக்குரல் "ஐயா ஏழை தருமம் போடுங்கள்" என்று புலம்பியது. முதுமையும், வறுமையும் பிணியும் கைகோத்துத் தேய்த்து ஓடாக்கிய அந்த மனிதப்பாண்டம் என்னிடம் எதிர்பார்த்தது என்ன? காலணாக்காசு. அதையா தருமம் என்று சொல்லுவது? எது தருமம்? வறுமையில் வாடும் மக்களுக்குக் கஞ்சி வார்ப்பதா, அல்லது வறுமையே இல்லாமற் செய்து விடுவதா?

கம்பருடைய மனத்திலே இந்தக் கேள்வி உதயமாகி இருத்தல் வேண்டும். ஆகவே தான், அவருடைய கோசல நாட்டில்

வண்மையில்லையோர், வறுமையின் மையால்"

ஆனால் தருமம் என்ற சொல் விசாலமான பொருளுடையது. "நற்செயல்" என்ற பொருளிலே பிறர்க்கு உதவுவது என்பதைத் தருமம் என்ற சொல் குறிக்கும். கம்பருடைய கோசல நாட்டிலே வறுமையில்லை. பகையில்லை, பொய்யில்லை, அந்த இலட்சிய உலகத்திலே எல்லோர்க்கும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தின, பிறருக்கு உதவும் நிலை அந்நாட்டில் ஏற்பட வில்லை.

இது எவ்வாறு நிகழ்ந்தது? கம்பர் சொல்கிறார்:

பொற்பின் நின்றன
பொலிவு பொய்யிலா
நிற்பின் நின்றன
நீதி, மாதரார்
அற்பின் நின்றன
அறங்கள்' அன்னவர்
கற்பின் நின்றன
கால மாரியே

கோசல நாட்டில் எது தருமம் என்றால் பொற்பும் அதன் தலை சிறந்த பகுதிகளாய அன்பும், கற்பும்.

இந்த நாடுதான் இராமனுடைய ஆட்சியின்கீழ் வருகிறது. இதை இராமனுடைய ஆட்சி எந்த வகையில் உயர்த்தியது? கம்பரைக் கேட்போம். கவிக் கூற்றுகவும், பாத்திரங்களின் வாயிலாகவும் இராமனே தருமத்தின் வடிவம் என்றே கம்பர் குறிப்பிடுகிறார். வசிஷ்டன் பேசுகிறான், இராமனைப்பற்றித்தான்.

புறத்து நூலொரு பொருள் இனிப்
புகல்கின்ற தெவனே
அறத்தின் மூர்த்தி வந்தவதரித்தான்
என்பதல்லால்.

இராமனைப்பற்றி இராவணனிடம் பேசும் அநுமன்,

"வேதமும் அறனும் சொல்லும் மெய்யற மூர்த்தி" என்கின்றான். "உலகினுக்கு அறத்தினூறெலாம் இழைத்தவன்" என்பது இராமனைப்பற்றி வாலி கூறும் மதிப்புரை. இராமனைக் கண்ட விபீஷணன்,

"ஆரருள் சுரக்கு நீதி அற நிறங் கரிதோ" என்கின்றான். "தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றினன்" என்றும், இராமன் செல்லும் இடமெல்லாம் தரும தேவதை தொடர்ந்து உடன் செல்கின்றது என்றும் கம்பர் குறிக்கின்றார்.

இந்தத் தரும வடிவத்தையே அரசனுகவும் "உயிரெலாம் உலாயதோர் உடம்பு" மாகவும் பெற்றது இராம இராஜ்யம். ஆகவே தருமந்தான் இராஜ்யத்தின் அடிப்படை. சரிதான். ஆனால் தசரத இராஜ்யத்திலும் தருமம் விளங்கவில்லையா? இராம இராஜ்ய தருமம் எவ்வாறு உயர்ந்தது? இருங்கள், கவனிப்போம்:

தசரதனுடைய கோசல நாட்டில் "துன்னருங் கொடுமக்" கூனி எவ்வாறு தோன்றினாள்? கைகேசியின் "தூய சிந்தை" எவ்வாறு திரிந்தது? இமையோர் 'மாயை'யும் அவர் பெற்ற நல்வர உண்மையும், "அரக்கர் பாவமும், அல்லவரியற்றிய அறமும்" இதற்குக் காரணங்கள் என்று கம்பர் கூறுகிறார். அவர் குறிப்பாக உணர்த்தும் வேறொரு காரணமும் உண்டு. தசரதனுடைய நாட்டில், அறங்கள் அன்பை அடிப்படையாகக் கொண்டு நின்றன. உண்மைதான். ஆனால் அன்பு குறுகிய தாய் விவரிக்குமானால் அறங்களும் குறுகிய அளவிலே அமையும். இந்த நிலையில் அறத்திற்குச் சார்பாக நிற்கின்ற அன்பு, மறத்திற்கும் துணையாக நிற்கும். கூனியின் அன்பு குறுகலானது. அவள் இதயத்தில் கைகேசியைத் தவிர மற்றவர்களுக்கு இடமில்லை. ஆகவே, தன் சூழ்ச்சித் திறமையால், கைகேசியின் உள்ளத்தில் இருந்த அன்பையும் ஒடுக்கி, அதைப் பரதன் ஒருவனுக்குமட்டில் உரியதாகச் செய்தாள்.

இதன் விளைவு, தசரதனை எவ்வாறு வருத்தியது என்பது நமக்குத் தெரியும். மூத்த மகனுக்கு முடி சூட்டுவது அவன் காலத்திய மரபு, இக்ஷ்வாகு குல தருமம். இதற்கு விரோதமாய் முளைத்தது கைகேசி பெற்ற வரம். இராமனிடத்தில் தனக்குள்ள அன்பையும், இராமன் மகுடம் சூடுவதில் தனக்கிருக்கும் ஆசையையும் சத்தியத்தைக் காப்பதற்காகத் தசரதன் ஒதுக்கி வைக்கிறான். இரண்டு தருமங்கள் ஒருவன் முன் நிற்கும்போது, உயர்ந்ததைப் பின்பற்றி, மற்றொன்றை விடுவதுதான் நேர்மை. இந்த வழியிலே செல்கிறான் தசரதன். ஆனால் இதற்காகச் செய்ய வேண்டியிருக்கும் தியாகத்தை அவனால் தாங்கமுடியவில்லை. தள்ளாடி விழுகிறான்.

ஆ கொடியோய் எனும் ஆவி
காணும் அந்தோ
ஒ கொடிதே அறம் என்னும்
உண்மை யொன்றும்
சாக வெனு எழும் மெய்த
ளாடி வீழும்

இது தசரதன் நிலை. 'அறம் கொடிது' இது தசரதன் வாக்கு. இதையே மந்திரப் படலத்தில் சுமந்திரன் சொல்கிறான்:

அறத்தினுங்கினிக் கொடிதெனல்
ஆவதொன்றியாதே

இராமனுக்கோ அறம் இவ்வாறு கொடுமையானதாய் இருந்ததே இல்லை. அரசுரிமை கிடைக்கும்போதும் அதை விடுத்துக் காடுசெல்ல நேரிடும்போதும் ஒரே நிலையில் பற்றற்ற ஞானியாக இராமன் நிற்கிறான். தர்ம முரண் ஏற்படும்போது தசரதனைப்போல் அவன் மகிழ்த்து வருந்துவதில்லை. கூனியைப் போல் அன்பை ஒடுக்கி ஒரு சிலரிடத்தில்மட்டும் படரவிடுவதும் இல்லை. அந்த அன்பு உலகனைத்தையும் அணைத்து நிற்கிறது. குகனையும் சுக்ரீவனையும் சகோதரர்களாக ஏற்றுக்கொள்கிறது. இராவணனுக்கு 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என நல்குகிறது. தீயளென்று தசரதன் துறந்த கைகேசியைத் தெய்வமென்றுவணங்குகிறது. தன்னலம்என்பதே இல்லாமல்

வெற்றியே பெறுக தோற்க வீக
வீயாது வாழ்க
பற்றுதலன்றி உண்டோ
புகலெமைப் பகர்கின் றீனை

என்று பேசி அபயம் அளிக்கிறது. இராமனுடைய தருமம் சத்தியத்தையும் சத்தியப் பொருளான இறைவனுடைய அகண்டமான கருணையையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது.

இந்தத் தருமமே இராம இராஜ்யத்தின் உயிர். அங்கே மனித வாழ்க்கைக்குத் தேவையான இயற்கை வசதிகள் எல்லாம் எல்லா மனிதர்களுக்கும் குறைவின்றி வழங்கப்பெறுகின்றன. அறிவுச் செல்வத்தையும் எல்லோரும் பெறுகிறார்கள். ஆனால் இவை எல்லாம் தசரத ராஜ்யத்திலிருந்து பெற்ற நன்மைகள். இராம இராஜ்யத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால் அங்கே, மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவும் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவும் வெவ்வேறுகப் பிரிந்து நிற்கவில்லை. மனித சமுதாயத்தின் ஒழுக்கம் குறுகிய அன்பிலிருந்து விலகாமல் உலகமெங்கும் பரந்த அன்போடு 'மும்மை சால் உலகுக் கெல்லாம் மூலமந்திர'மான தெய்வ நீதியோடு இணைந்து செல்கிறது. அந்த அன்பின், அந்தத் தெய்வ நீதியின் வடிவமாக இராமன் நிற்கிறான். சமூதாயத்தில் ஒவ்வொருவரும் ஆற்றுகின்ற பணியின் தன்மையாலோ, தனி மனித வாழ்க்கை குடும்ப வாழ்க்கை இவற்றால் ஏற்படும் உறவுகளாலோ பிறப்பினாலோ விளைகின்ற 'சிறு நெறி' அங்கே இல்லை. ஏனெனில், அங்கே நீதியால் — அதாவது உலகனைத்துக்கும் பொதுவான நீதியால் — விளைகின்ற நெடுந்தரும நெறியிலே வாழ்க்கை செல்கிறது. இராம இராஜ்யத்திலே கடமைமுரண் இல்லை. குறுகிய அன்பினால் விளையும் பூசல் இல்லை. அறியாமையால் ஏற்படும் பயமும் அகங்காரமும் இல்லை. ஆகவே 'அறம் கொடிது' என்ற வேதனையும் இல்லை. அங்கே இறைவனுடைய அகண்ட கல்யாண குணங்களான சத்தியத்தோடும் எல்லையற்ற அன்போடும் எல்லா உயிர்களும் ஒன்றி நின்று வாழ்கின்றன. ஏனெனில் அந்த இராஜ்யத்தின் தலைவன் இராமனுய் வந்து தோன்றி தராதல முழுதும் காத்து நின்ற, காத்து நிற்கின்ற காத்துநிற்கும பராபரப் பொருள்.

தலைவர் முடிவுரை

பெருங்காவியத்தை ஆய்ந்த வர் பெருமக்களே! பெருமக்களின் தமிழ் மழை நின்றது, தூவானம் சற்றுண்டு. பேராசைப் பெருங்கடலை ஜாதிகுல பேதமற்ற சத் சங்கத்தின் துணைகொண்டு அரக்கனை வென்று பொன்னுருவ மாயையால் மதியிழந்த மனமதியின் மாயையை ஞான உணர்ச்சியால் விலக்கி சுமதியாக்கி ஆணவ அழுக்கில் சிறைப்பட்ட ஜீவனை சிறையெடுத்து ஆகாயனுக்கி அகண்டனுக்கி பிரம்மமாக்கி ஆனந்த அனுபூதியில் சேர்ப்பதே இராம இராஜ்ய ஸ்வராஜ்யமாகும். அந்த சாந்தியெனும் இராஜ்யத்தைப் பெறவேண்டும்.

ஜீவராசிகளின் குற்றத்தைக் கருணையால் அன்பால் அகற்றி அவைகளை அன்பில் ஆட்கொள்ள வேண்டும். தீண்டாத ஜாதியின் சபரியையும், இந்திரனைத் தீண்டிய அகல்யையையும், ஸ்ரீ சீதாதேவியின் அங்கங்களை பங்கம் செய்ய முயற்சித்த காகாசுரனையும், வனவேடர்களின் அரசனை குகனையும், ரிஷிகளையும் தன்னைக் காட்டுக்கு விரட்டிய கைகேயியையும் ஆட்கொண்ட சமரச அன்பே இராமாவதாரத்தின் பெருமை. அதுவே இராம இராஜ்யத்தின் தர்மம். இராம இராஜ்யத்தின் பெருமையை கம்பர் தமிழின் வாயிலாக நமக்குக் கொடுத்திருக்கிறார். இராம இராஜ்யத்தைக் கண்ட கவி மணி சந்தோஷிக்கின்றார்:

பூவால் பசுங்கொடியும்
புன்சிரிப்பால் கைம்மகவும்
காவால் பசுங்கிளியும் கன்கோதும்
—மூவாத
சீரன் அருளைச்
சிறுமால் அடிமறவாச்
சோரனின் ஆடசுக் குணம்.

அன்பின் திறன்

'யாழ்ப்பாணன்'

1. வஞ்சந்தான் வீழுமோரு படுகோம் பொன்றை
வஞ்சிநீ வையத்தி லுறுதி யென்றே
இளந்தளிர்கள் பலவெறிந்து சுற்றிக் கொண்டாய்
இன்பமென அதிற்படர்ந்து பூத்து நின்றாய்
விழுந்தழியும் படுகோம்பும் மீட்சி பெற்று
மேதினியிற் ளிர்விடுதல் விந்தை யன்றே
உளந்தனில்நின் றூறுமேரு ருயர்பே ரன்பின்
உறுதிறனை யின்றுலக மறியச் செப்பும்.

2. அன்பினிலே கவிதையெழும் அகந்தை மாயும்
அடுத்துவரும் துன்பமெலா மஞ்சி யோடும்
மன்பதைக ளுய்வுகொளும் மகிழ்வு சேரும்
மகிதலத்தி லன்பினுக்கோ விலையு மில்லை
இன்பமென விண்ணவர்கள் துய்த்து வாழும்
இன்னமுதும் அன்பினுக்கோ ஈடா மில்லை
அன்புள்ள முருகுங்கால் ஆங்குத் தோற்றும்
அருட்சக்தி வடிவமெலாம் அவனி யோர்க்கே.

3. அன்பென்னும் ஊர்தியிலே பறப்ப வர்க்கோ
அதன்முக்கம் தவலச்சுழற்சி பலவே யாகும்
அன்பினைநீ வளர்ப்பதற்குத் தியாகம் வேண்டும்
அதிலன்பு தளிர்விட்டு ஓங்கிக் காணும்
அன்பென்னப் பலபேர்கள் சாற்று கின்றார்
அவனிதனில் மெய்யன்பைக் கண்டி லாதார்
அன்பினிலே திளைத்தவர்க்குச் சிவனூர் தோற்றம்
அரைநொடியிற் காணுமென்றே அகிலஞ் செப்பும்.

பௌத்தமும் வேதாந்தமும்

போதிமணி தந்த நிதி

[சுவாமி நடராஜானந்தா]

புத்தபிரான் பிறந்த காரணத்தினாலே புனிதமடைந்தது வைகாசி மாதம். புராதன இந்தியாவின் தலை சிறந்த மஹாபுருஷர்களுள் மிகவும் பாராட்டப் படுவர் போதி முனிவர். அவருடைய எண்ணமுஞ் செயலும் அவர் காலத்தில் மிகவும் இயக்கச் சக்தி வாய்ந்தனவாயிருந்தன. 'ஆனால் சாதாதிர ஆராய்ச்சி மலிந்த இக்காலத்தில் அவருடைய கொள்கைகள் மக்களுக்கு இன்னுஞ் சிறந்த பயனையளிப்பதாகத் தோன்றுகின்றன. காலத்தையும் எதிர்த்து வெற்றிபெறக் கூடிய அவருடைய மூல சக்தி யாது? அது எவ்வாறு தற்கால மனிதனி னுள்ளத்தைக் கவருகின்றது? இவை பற்றி ஆராய்வாம்.

இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரேதான புத்தருக்கும் அவருடைய கொள்கைகளுக்கும் தக்க சன் மானம் இந்தியாவில் வழங்கப்பட்டது. உலகிலுள்ள ஒவ்வொரு கொள்கையும் ஐதீகத்திலே முடிகின்றது. சிலர், புத்தரையும் அவருடைய போதனைகளையும் வெறுத்துத் தள்ளினர். ஆனால் பரந்த நோக்குடையவர்களும், பெருந்தொகையினரான சாதாரண மக்களும் அவருடைய போதனைகளை அங்கீகரித்தனர். புத்தரின் போதனையும் வேதாந்தமும் ஒரே உண்மையைப் போதிக்கின்றதென்று சங்கராச்சாரியார் முதன் முதலாக எடுத்துக் கூறியுள்ளார். பிற்காலத்தில் ஜயதேவன் என்னும் புலமை நிரம்பிய ஞானி புத்தரை விஷ்ணுவின் அவதாரமெனப் புகழ்ந்துபல வாழ்த்தக் கவிகளைப் படியிருக்கின்றார். புத்தபகவானுடைய போதனைகளுக்குத் தக்க மதிப்புக் கிடைத்தது பதினென்பதாம் நூற்றாண்டுதொடக்கந்தான். மேனாட்டுக் கலை இந்தியாவில் புகுந்த காரணத்தினாலும், அதன் மூலம் ஏற்பட்ட இந்திய சரித்திரத்தின் பரந்த நோக்கத்தினாலும் பௌத்த மதம் மதிப்படைந்தது.

இந்திய சரித்திரத்தில் புத்த பகவானின் பங்கென்ன? அவர் என்ன குறைபாடுகளை நிவர்த்திக்க வந்தார்? அவற்றை எவ்வளவு தூரம் நிறை வேற்றினார்? இவற்றிற்கு விடையளிப்பதற்கு வேத, உபநிடத போதனைகளை நாடவேண்டியிருக்கின்றது. வேதகாலத்திலே யாகங்களுக்கு முதன்மையான இடம் அளிக்கப்பட்டிருந்தது. யாகஞ் செய்வோருக்குச் சுவர்க்கலோக இன்பமளிப்பதாக வேதங்கள் கூறின. ஆகையினாலே யாகங்களுக்கு மிதமிஞ்சிய மதிப்பு ஏற்பட்டது. உலகில் தோன்றிய சமயவரலாறுகளெல்லாவற்றிலும் யாகமும் ஒரு தேவையான அங்கமாகக் கருதப்படுகின்றது. ஆனால் தத்துவ சாத்திர ஆராய்ச்சி வளர வளர, யாகங்கள் பயனற்றவை யென்றும், தூயவாழ்வே உயர்ந்த இலட்சியத்தையடைவதற்கு வேண்டிய வழியென்றும் சொல்லப்படுகின்றன. வேதகால ஆசாரியர்களெல்லாம் மோக்ஷ லோகத்தைப் பற்றிய விசாரணையில் முயன்றனர்; உபநிடதங்களோ தத்துவப் பொருளைக் கூர்ந்து அவதானித்து அறிந்து, அதை அடையும் வழிகளை சாத்திர முறைப்படி வகுக்கும் வழியில் முயன்றன. வேதாந்தக்கொள்கை அதியுன்னதமானது. ஹெரகிளிடஸ், பிளேத்தோ, காண்ட், ஹெகல் உள்பட்ட தத்துவ சாத்திரிகளெவரும், எந்த இயற்கைச் சக்தியாலும் அசைக்கமுடியாத வேதாந்தச் சிகரத்தைக் கட்டத் தவறினார்களில்லை. கல்லின்மேல் கல் அடுக்கிப் படிகட்டுவது போலும், படியின் மேல் படியெழுப்பிச் சிகரத்தை நிறுவுவதுபோன்றும் கட்டப்பட்டது இச்சிகரம். இதை உற்றுநோக்குங்கால், தொடங்கியதும் ஒரு கல்லுடன்தான், இறுதியில் முடிந்ததும் ஒரு கல்லுடன்தான் என்னும் உண்மை புலப்படுகின்றது. இந்த ஏகப் பொருளுக்கே ஆத்மனென்றும், பிரம்மனென்றும் வெவ்வேறு பெயரிடுகின்றோம்.

உபநிடதங்கள் வைதீகருடைய கிரியைகளைக்கண்டித்தன; ஆனால் அவை தக்க பலனை அளிக்கவில்லை. இந்தக்களின் தலையின்மீது வைதீகர்களால் சுமத்தப்பட்ட பெருஞ் சுமையாகிய கிரியைகளுக்குச் சாவுமணி யடித்து அவற்றை நெடுங்காலந் தலைகாட்டா வண்ணம் நடுத்தவர் புத்தபகவானே ஆவர். உபநிடதக் கொள்கைகளும், கீதை வற்புறுத்தும் தூய வாழ்வுநெறியும் அவருடைய போதனைகளில் கலந்துள்ளன. அவசியமற்ற கொள்கைகளைப் புறக்கணித்துவிட்டு, ஒவ்வொரு மனிதனும் தத்தம் சுபாவத்துக்கேற்ப சுதந்திரமாக வளருவதற்குத் தகுந்த சீரிய வாழ்க்கை முறையை நிறுவினார். அசோக சக்கரவர்த்தி காலத்தில், சாதி வேற்றுமை, தீண்டாமை, என்னும் சமூக ஊழல்களை நீக்கிச் சனசமுதாய ஒற்றுமையை ஏற்படுத்தவதற்குக் காரணகர்த்தாவாயிருந்தவரும் அவரே. நாம் சரித்திர சம்பந்தமாக ஆராயும்போ

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னகம்: வீய, வைகாசி கூ

ஆசிரியர்களும் சம்பள அறிக்கையும்

நெடுங்காலமாக யாவரும் எதிர்பார்த்திருந்த சம்பள அறிக்கை வெளியாகிவிட்டது. உத்தியோகத்தரின் சம்பள விகிதம் உயர்த்தப்பட்டிருக்கின்றது உண்மையே. பொருட்களின் விலையும் வாழ்க்கை நிலையும் உயர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில், சம்பள விகிதம் உயர்த்தப்படுவது அத்தியாவசியமென்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆனால், உத்தியோகம் வகிப்போரின் பொறுப்பும் ஆற்றலும் உத்தியோகத்தன்மையும் நோக்கியே சம்பளம் விதிக்கப்பட வேண்டுமென்பதை அரசினர் இலக்காகக் கொள்ளவேண்டு மென்பதே யாவரும் விரும்புவது. இப்போது வகுக்கப்பட்ட சம்பள ஒழுங்குகளில் இவ்விஷயம் கவனிக்கப்பட்டதா? என்பதுதான் பிரதானமாக ஆராயப்படவேண்டும். தராதரம் நோக்காது சம்பள விகிதம் நிதானிக்கப்படின், அதிருப்தி ஏற்படாது போவதெப்படி?

மற்றைய அரசாங்கப் பகுதி உத்தியோகர்த்தர்கட்குச் சம்பள விகிதம் அமைத்தது போல், ஆசிரியர்கட்கும் அமைக்கப்படவில்லை யென்பதுதான் பெரியகுறை. ஆசிரியர்களே அரசாங்க உத்தியோகத்தருடன் சேர்த்துக் கொள்ள வியலாதெனச் சிலர் வாதிக்கின்றனர். இஃது உண்மையாயினும், ஆசிரியர்கட்குள்ள பொறுப்பும் சிரமமும் எத்தகையதென்பதை இங்கு நாம் விசேஷமாக எடுத்துக் கூறவேண்டியதில்லை. நாட்டின் முன்னேற்றம் கற்றுக் கொடுக்கப்படும் கல்வியையே ஆதாரமாகவுடையது. இக்கல்வியைக் கற்றுக்கொடுக்க ஏற்ற தகுதியும் ஆற்றலும் வாய்ந்த ஆசிரியர்கள் முன்வராக்கால், நிலைமை எப்படியாகுமெனச் சொல்லவும் வேண்டுமோ? இதுவரையும் பொதுவாக எவரும் ஆசிரியர் பதவியை நாடுவது அருமை. அரசாங்க உத்தியோகம் அல்லது சீவனோபாயத்துக்குவேறு வழி கிடையாதவர்களே ஆசிரியர் பதவியை என்ன செய்வதென மேற்கொண்டனர். இதற்குக் காரணம், செய்யும் வேலைக்கு ஏற்ற சம்பளம் இவர்கள் பெறுதிருந்தமையே.

நீடித்திருந்த இக்குறை சென்ற சில ஆண்டுகளில் ஓரளவுக்கு நீக்கப்பட்டதாயினும், விரும்பியவாறு பூரணமான திருத்தங்கள் இன்னும் முற்றுக ஏற்படவில்லையென்றே கூற வேண்டியிருக்கிறது. சென்ற சில ஆண்டுகளில் அநேக ஆசிரியர்கள் தமது பதவிகளைப் பரித்தியாகஞ் செய்துவிட்டு, வருவாய் அதிகமாகப் பெறக்கூடிய வேறு பதவிகளே நாடிச் சென்றனர். ஏற்ற சம்பளம் ஆசிரியர்கட்கு வழங்கப்பட்டுவரின், இந்நிலை ஏற்படுமா? அன்று. ஆகையால், ஆசிரியர்க்கு உயர்ந்த சம்பளம் வழங்க அரசினர் தயங்காதிருக்க வேண்டும். அப்போதுதான் தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்களைப் பெறக்கூடியதாகும். இவ்விஷயத்தை அரசினர் இன்னும் உணராதிருப்பது பெரிய ஆச்சரியமாகின்றதல்லவா? ஆசிரியர்களைச் சாதாரண கூலிகளாகத் தானும் கருதாது விடுவது எவ்வளவு அறியாமை. சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர் பெறுஞ் சம்பளத்தளவு தானும் ஆசிரியர் பெறுதிருப்பாராயின், அவருக்கு வழங்கப்படும் மதிப்பு எத்தன்மையதென்று விளக்கவும் வேண்டுமா?

அதிக கல்வியைக் கற்றவர்கட்குக் குறைந்த சம்பளமும், அற்ப கல்வியுடையார்க்கு உயர்ந்த சம்பளமுமாகவே இதுவரையும் இருந்து வந்தது, இனி, அப்படியிருக்கமுடியாது. ஆசிரியர்கள் தங்களுரிமையை உணர்ந்துவிட்டனர். சம்பளம் உயர்த்தப்படாவிடின், வேலை நிறுத்தஞ் செய்யவும் யோசனைகள் நடக்கின்றன. இவ்வளவு தூரத்துக்கு இவ்விஷயம் உச்ச நிலையை அடைய அரசினர் வாளாவிருப்பாரென நாம் எண்ணவில்லை. ஏற்ற முறையில் நீதியாக ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்பதே எமது அபிப்பிராயம். மற்றைய உத்தியோகத்தர்களைப் போலன்றி ஆசிரியர்களின் கடமை எவ்வளவு பொறுப்பும் தேசமுன்னேற்றத்துக்கு உயிர் நாடியாகவுமுள்ளதென்பதை அரசினர் உணரல் வேண்டும். பிரதானமாக, ஆரம்ப பாடசாலை மத்திய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் வேதனம் அவசியம் கூட்டப்படவேண்டும். சமீபத்தில் இந்தியாவிலும் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டதாகும். இலங்கை அரசினர் என் இவ்விஷயமாகத் தாமதஞ் செய்ய வேண்டுமோ?

அரசினர் பிடிவாதமாக நின்று ஆசிரியர் சம்பளத்தை உயர்த்த ஒருப்படாவிடின், அவசியமின்றி வேலை நிறுத்தங்களும் பிணக்குகளும் நிகழக் கூடும். அவ்வித நிலை ஏற்படுவதை எவரும் விரும்பார். அரசினரும் அப்படி நிகழ இடங்கொடுப்பாரென நாம் நம்பவில்லை. நாட்டின் முன்னேற்றத்திற்கு ஜீவாதாரமாயுள்ள கல்வியை, எவ்விதத்திலும் குறைவின்றி விருத்தி செய்யவேண்டியது தான் அரசினர் கடமை. ஆசிரியர்கள் தமது தொழிலிற் கவர்ச்சி கொள்ளும் வகையில், சம்பளத்தை நிர்ணயிப்பதே முறையாகும். அவ்வாறன்றிப் பழைய முறையைக் கையாளின், அலங்கோலங்களே நிகழ்ந்து வரும். கல்வி விருத்தியும் தடைப்படும். தக்க ஆசிரியர்களைப் பெறுவதும் அரிதாய் விடும். இப்பொழுது ஆசிரியர்கள் இயலாததொன்றைச் செய்யும்படி கேட்கவில்லை. அரசாங்க உத்தியோகத்தர் நிலையிலாவது தம்மையும் வைத்து நோக்கும்படியே கேட்கின்றனர். இந்த நீதியான கோரிக்கைக்கு அரசினர் இணங்காவிடின், நாட்டின் முன்னேற்றத்துக்கு அரசினரே முட்டுக்கட்டை போடுவதாயிருக்குமென்பதுதான் முடிபு.

நன்றியறிதல்

திரு. ச. இராசரத்தினம் அவர்களும் அவர்தம் பாரியாரும் கடந்த 11-5-46-ல் நடைபெற்ற தமது திருமணத்தின்போது வாழ்த்துச் செய்திகளும், அன்பளிப்புகளும் அனுப்பிய அன்பர்கள் யாவருக்கும் தமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றனர்.

புன்னலைக்கட்டுவன்
18-5-46.

யாழ்ப்பாணம் மலையாள ஐக்கிய சங்கம்
புகையிலைக் கொள்வனவு அறிவித்தல்

இவ்வருடத்தில் யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை ஐக்கியவியாபார சங்கம், வரும் ஜூன் மாதம் 3-ந்திகதி தொடக்கம் கீழே காட்டப்படும் விகிதாசாரப்படி புகையிலை கொள்வனவு செய்ய ஒழுங்கு செய்திருக்கிறது:

தினுசு		முத்தல் விகிதம் ரூ. ச.
1	—	1-00
2	—	95
3	—	90
4	—	85
5 & 6	—	80
7	—	70
8	—	60
9	—	50
10	—	40
11	—	35

பாதை ஓரத்தில்

★

பாட்டைசாரி

புதிய சம்பளத் திட்டம்

வெளிவந்துவிட்டது. துள்ளிக் குதிக்கின்றனர் சிலர்; அடிவயிற்றைத் தடவுகின்றனர் பலர். 30,000க்கு அதிகமான சுவாபாஷா ஆசிரியர்கள் கை நிறைய சம்பளமில்லையென்றால் 'இதோ வேலை நிறுத்தம் செய்யத் தயார்' என்று பயமுறுத்துகின்றனர். சமூக வாழ்வில் முக்கிய பங்கு எடுப்பவர்கள் ஆசிரியர்கள். எழுத்தறிவித்தவன் இறைவனென்று சொல்லிக்கொண்டு ஆசிரியர்களைத் தூரத்தில் ஒதுக்கி வைப்பது பாதகச் செயல். கூலிக்கு மாரடிக்கும் ஆசிரியர்களும் இருக்கின்றார்கள்தான். அதற்காகச் சகல ஆசிரியர்களின் வயிற்றிலும் அடிப்பது தர்மம் அல்ல. அவர்களும் சரி, நிகர், சமானமாக வாழவேண்டும். நாட்டுக்கும் உழைக்க வேண்டும். ஆனால் ஆயிரம் சலாம் போட்டுப் பெரிய புள்ளிகளுக்குப் பின்னால் பெட்டி தூக்கிக்கொண்டு மாதிரம் போகக்கூடாது.

'புசர்'மாப்பேணி

மனிதவர்க்கத்தில் ஏழைகளும் அடிமைகளும் இருக்க முடியாது. அப்படியிருக்குமாகில் இதற்குச் சமூகந்தான் பொறுப்பு. ஆளும் வர்க்கம் ஒன்று தலையில் ஏறியிருக்கும்வரை விமோசனங் கிடையாது. எத்தனை பகட்டான திட்டங்களை வெளியிட்டாலும் ஈரும், பேனும் உள்ளுக்கு இருக்கத்தான் செய்யும். "புதிய சம்பளத் திட்டம் எப்படியிருக்கின்றது?" என ஒருவரைக் கேட்டேன். அவர் ஒரு தமாஷ் பேர்வழி. "எப்படியா? இழுது தட்டிய பெண்களுக்குப் 'புசர்'மாப்பேணி கொடுப்பார்களே! அப்படித்தான் இருக்கின்றது" என்றார் அவர்.

'காணிவல்' ஹாஸ்யம்

புசர்மாப் பேணியைப் பற்றிப் பேசும்போது யாழ்ப்பாணத்தில் இப்போது நிகழும் 'காணிவல்' நினைவுக்கு வருகின்றது. அரசாங்கம் பொருட்காட்சிகளுடன் பிரசார இயக்கங்களையும் பிரபல்யமாக்க விரும்புகின்றது. இதனால் தேசீய சேமிப்புப் பகுதியும் அங்கு ஓர் இடத்திற் குடியேறியிருப்பதைக் காணலாம். "என்ன ஐயா உங்களுக்கு இங்கு என்ன அலுவல்" என்று கேட்டேன், அவ்வியக்கத்து உத்தியோகஸ்தர் ஒருவரை. "அப்படி ஒன்றுமில்லைக் களியாட்ட விழாவுக்கு வருபவர்கள் எல்லோரும் கண்மூடிக்கொண்டு செலவு செய்து விடுகின்றனர்; அவர்களையெல்லாம் அப்படிச் செலவு செய்யவேண்டாம் என்று அறிவுறுத்தவதற்காகவே இத்தத் தேசீய சேமிப்பு இயக்கம்" என்று குளிர்மையாகக் கூறினர். 'காணிவல்' என்றூற் காசுச் செலவு. சேமிப்பு இயக்கத்துக்கு அங்கே என்ன வேலை, ஐயா?

வெளிப்பூச்சு

வெள்ளி—பச்சை வர்ணங்கள் தீட்டப்பெற்ற அழகிய ரயில் வண்டி கொழும்புப் பக்கத்தில் இப்போது சில நாட்களாக ஓடுவது நீங்கள் அறிந்ததுதானே. எதோ சகல வசதிகளும் இதில் உண்டு, சௌகரியமாகப் பிரயாணஞ் செய்யலாமெனப் புகைரதப் பகுதியார் பிரமாதப்படுத்துகின்றனர். ஆனால் அங்கு அப்படிச் சௌகரியங்களே அனுபவிக்க முடியவில்லையென அதில் ஏறிச் சென்றவர்கள் முறையிடுகின்றனர். வெளிப் பூச்சில் உலகம் மயங்குவதை அரசாங்கமும் அறிந்து, அள்ளுகாசும் தென்னம்பிள்ளையுமென்று நிற்கின்றது. கண்களைப் பறிக்கும் இப் புதிய ரயில் வெளிப்பார்வைக்குத் தளதளத்தாலும் உள்ளுக்கு மகா மோசமாம்?

கன்னங்கரா புராணம்

கல்வி மந்திரி கன்னங்கரா பொதுக்கூட்டங்களிலே தமது எதிரிகளை நன்றாக வெளுத்து வாங்கிவிடுகின்றார். மத்திய பாடசாலைகளை எள்ளி நகையாடுபவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்கவும் அவருக்கு விருப்பம். பண்டாரவளையில் ஒரு கூட்டத்தில் பின்வருமாறு கூறியிருக்கின்றார் "இங்கு ஒரு சிலர் இருக்கின்றனர். இவர்கள் என்னிடமிருந்து அற்புதங்களே எதிர்பார்க்கின்றனர். புதுக்கப் புதுக்க விவாகம் செய்த ஓர் ஆணையும் பெண்ணையும் பார்த்து அடுத்த தினத்திலே இரண்டு பிள்ளைகளைப் பெறவேண்டுமென கேட்பதை நிகர்க்கின்றது, இவர்களின் மனநிலை." கன்னங்கரா புராணத்தில் இது ஒரு ரகம்!

தேர்தற்கதை

யாழ்ப்பாணத்துக்குச் ஸோல்பெரித் திட்டத்தின்படி ஒன்பது ஸ்தானங்கள் கிடைக்குமாம். அப்படியானால் அத்தனை பிரதிநிதிகளையும் நவக்கிரகங்கள் என்று சொல்லுவதா, என்ன? ஏதோ ஒரு தொகுதியில் பன்னிரண்டுபேர் தேர்தல் விழாவுக்கு நடத்தப் போவதாகக் கேள்வி. பன்னிரண்டு ராசிகளின் பிரதிநிதிகளாகவும் இவர்கள் தோன்றக்கூடும். நவக்கிரகங்களும் பன்னிரண்டு ராசிகளும் என்ற கதை இப்போதே அடிபட ஆரம்பமாகிவிட்டது.

கலாபவனம் :: :: பரதநாட்டியம்

பந்தநல்லூர் ஜயலக்ஷ்மி

அரியரத்தினம்

பரதநாட்டிய கலைக்குப் புத்துயிர் அளித்த நாட்டிய கலாநிதி பந்தநல்லூர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையைக் கலைவளர்ச்சியில் ஆர்வங்கொண்டவர்கள் அறியாதிருக்கமுடியாது. அவருடைய கலைஞானத்தைத் தமிழ் உலகிற்குத் தெளிவாக எடுத்துக் காட்டுபவர் அவருடைய சிஷ்யையும் பௌத்திரியுமான நடனராணி பந்தநல்லூர் ஆர். ஜயலக்ஷ்மி. பரமேஸ்வரக் கல்லூரி வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் குமாரி ஜயலக்ஷ்மியின் பரதநாட்டிய-அபிநயக் கச்சேரியும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தை நிறைவாக அனுபவிக்க முடியவில்லை. ஸ்ரீ ஜயலக்ஷ்மியின் கச்சேரி அதற்கெனத் தனியாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

பத்து வயதில் மேடையேறிய ஸ்ரீ ஜயலக்ஷ்மிக்கு இப்போது ஆகக்கூடிப் பதினைந்து வயதுதான். உயர்திரு. இராமநாதபுரம் ராஜா சண்முகசுந்தர சேதுபதி அவர்கள் சமீபத்தில் நாட்டியக் கலாநிதியின் சிஷ்யைக்கு நிருத்திய சூடாமணி என்ற பட்டத்தை வழங்கியிருந்தார். பரதநாட்டியக் கலையிற் பக்குவம் பெற்று அதைத் தாய முறையிற் கையாண்டுவரும் குமாரி ஜயலக்ஷ்மிக்கு இப்பட்டம் மிகவும் பொருத்தமானதே. இன்று பரதநாட்டியக் கலையில் மிகவும் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவரும் இவரே.

பாவம், தாளம், ராகம் என்ற மூன்றும் லாவண்யமாக அமையாதாகில் பரதநாட்டியம் உயர்ந்த முறையில் சோபிக்க முடியாதி. ஸ்ரீ ஜயலக்ஷ்மியின் நாட்டியதை அனுபவிப்பவர்கள் இம்மூன்றும் கச்சிதமாக அமைந்திருப்பதை உணர்வார்கள். பழைய பண் பாட்டிற் பக்குவம் பெற்ற இக் கலையரசியின் கொடி போன்ற உடலமைப்பு நடனத்துக்குச் சுகம் கொடுக்கின்றது.

ஸ்ரீ ஜயலக்ஷ்மியின் இரு கச்சேரிகளிலும் அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம் என்பன ஆடல் நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன. சகல நிகழ்ச்சிகளும் உயர்வாகவே காணப்பட்டன. உடலசைவுகள் வெகு சரிதமாகக் கண்மூடி விழிக்க முன் நிகழ்ந்து விடுகின்றன. விசையான உடல் வீச்சுக்கள் உன்னத நிலையை அடைந்திருப்பதுடன் தாள அமைவும் தீர்மானங்களும் சுத்தமாகவிருக்கின்றன

பதங்கள் அத்தனையும் அனைவருக்குந் தெரிந்ததாயினும் ஸ்ரீ ஜயலக்ஷ்மியின் அபிநயமும் முகபாவங்களும் தனிச்சிறப்பு வாய்ந்தன. உள்ளக் கருத்துக்கள் அப்படியே பளிச்சென்று முகத்திற் பளிங்குபோல் மின்னி மின்னி மறைகின்றன. 'என் பள்ளி கொண்டீரையா' என்ற பதம் நிருத்திய சூடாமணிக்கு மிகவும் பரிச்சியமானது என்று அழுத்தமாகக் கூறலாம். நவரத்தின மாலிகையில் அமைந்த வர்ணமும் அற்புதமானது. தோடி, சங்கராபரணம்," பூரி கல்யாணி, அடாணை, பைரவி, வசந்தா போன்ற ராகங்கள் ஒன்றன்பின் ஒன்றுக மாறிக்கொண்டு வந்தன.

மேடை ஒழுங்குகள் சிறந்த முறையில் அமையாத விடத்தும் பின்னணிச் சங்கீதம் சிறப்பாக அமைந்திருந்தது. ஸ்ரீ ஜயலக்ஷ்மியின் சகோதரன் பந்தநல்லூர் ராஜகோபாலன்தான் மிருதங்கம் வாசித்தார். தாயார் ஸ்ரீமதி பி. எஸ். ராஜாயியும் சகோதரி ஜீவாய் என்பவரும் பதங்கள் இசைத்தனர். ஸ்ரீ முத்தையா பிள்ளையின் வயலின் வாசிப்பு இதமாகவிருந்தது. சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கும் ஸ்ரீ ஜயலக்ஷ்மியின் பரதநாட்டியக் கச்சேரி மிகவும் உயர்வானதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. கோகிலகானம் எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பாராட்டு தலுக்கும் நிருத்திய சூடாமணி பாத்திரமாவர் என்பதை ஞாபகமூட்டுகின்றேன்.

ஒற்றை மாட்டு வண்டி
ஓடுவது சாத்தியமா?

அல்வாய், மு. செல்லையா

விருத்தம்

எண்ணுங்காங் கிரசு லீக்கு எனுமிரு சில்லி னூடு
துன்னுமைக் கியமா மச்சைத் துணிவுட னிவணத்து நேர்மை
என்னுமீற் ருணி கோத்தங் கிலங்கிடு தொண்டே என்னும்
பின்னமில் தட்டுச் செய்து பெயராமை வர்க்கால் பூட்டி

வீரரா சாசி ஜின்னு விளங்கிடு பட்டே லாதி
தீரர்கள் சூழ்ந்தி ருப்பத் தேர்ந்திடு ஜவஹ ரென்னும்
பேரமர் காவ லூட்டிப் பிறங்கிடு மஹிம்சைக் கோலால்,
சீரமர் காந்திப் பாகன் செலுத்திடிற் சேமந் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

உருப்படாத மகாநாடு
பிரிட்டனின் புதிய அறிக்கை

சிம்லாவில் நிகழ்ந்த மந் திராலோசனைகள் உருப்படவில்லை. ஆகவே முக்கூட்டு மகாநாடு முறிந்துபோயிற்று. இருந்தபோதிலும் தூதுக்கோஷ்டியின் முயற்சிகள் தோல்வியுறவில்லையென காந்திஜி நம்புகிறார். இந்தியா விஷயம்பற்றி சமீபத்தில் (15-5-45) ஈழகேசரியில் எழுதும்போது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன். "சகல கட்சியினரையுஞ் சமாதானஞ் செய்வது பரமசங்கடமான ஒரு விஷயம். இவ்விததொல்லை நிகழுமாயின் இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்துவதே சிறந்த மார்க்கம்" கடந்தமாதம் 23-ந்திகதி சர்தார் படேல் விடுத்த அறிக்கையில், "ஒற்றுமை உண்டாக்கி, அதன் பின்னதாகத் தூதுக்கோஷ்டியின் திட்டத்தை அறிவிப்பதாயின் மந்திரி கோஷ்டியினரின் முயற்சி தோல்வியடைவது நிச்சயம்" என்று ஏற்கனவே எச்சரித்துள்ளார். ஒற்றுமை ஏற்படுவது நல்லதுதான். ஆனால் அந்த நன்மை இடையாதுவிடின் அது ஒரு தடையாக நின்று தேச முன்னேற்றத்துக்குப் பங்கம் விளைப்பது தவறென்பதை பிரிட்டிஷ் மந்திரிகள் இன்று நன்கு உணர்ந்திருக்கின்றனர்.

காங்கிரவின் அடிப்படையான நோக்கங்களை முஸ்லிம் லீக் தகர்த்தெறியக் கங்கணங் கட்டி நிற்பதினாலே இத்தனை வருடங்களாக எவ்வித சமரசமும் ஏற்படாமல் இந்தியா கட்டுண்டு கிடக்கின்றது. பாரத புண்ணிய பூமி இந்துக்களின் நாடாகவிருக்க வேண்டுமென்பது காங்கிரவின் நோக்கமல்ல. தேசியத்தை அடிப்படையாகக்கொண்ட இந்திய சமுதாயத்தை அமைப்பதே காங்கிரவின் இலட்சியம்.

இது சாத்தியமாகும்வரை இந்தியாவுக்குப் பொருளாதார விடுதலை ஒருபோதுங் கிடைக்கமாட்டாது. பிரிட்டனும் இதை தன்கு உணர்ந்திருக்கின்றது. சமயப் பூசல்களிலும் பார்க்கப் பொருளாதாரப் பிரச்சினைதான் முக்கியமென்பதையும் வெள்ளையர்கள் அறிவார்கள். இருந்தபோதிலும் அதிகாரத்தைக் கைவிடுவதற்குத் தயங்குகின்றனர்.

இங்கிலையில் காந்திஜி தெரிவித்த ஒரு கருத்தை இங்கு தருவது பொருத்தமானது. "உலகம் கலகத்தில் அமிழ்ந்தியிருக்கின்றது. யுத்தம் நின்றவிடத்தும், இந்த யுத்தத்தின் மூல காரணங்கள் இன்னும் அழிந்தபாடில்லை. இது சமாதானம் அல்ல. மற்றுமோர் மகாயுத்தத்திற்காக மௌனமாக நடைபெறும் ஒரு முயற்சி என்றே கூற வேண்டும்" இவ்வாசகம் 1946-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 13-ந் திகதி வெளிவந்த சென்னை ஹிந்துப் பத்திரிகையிற் காணப்படுகின்றது. உண்மையாகவே இந்தியாவில் நிற்கும் பிரித்தானிய தூதுக்கோஷ்டியினர் மற்றுமோர் யுத்தத்துக்கு மௌனமாக அடிகோலுகின்றனர் என்றுதான் சொல்லத்தோன்றுகின்றது. இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்க வந்திருப்பதாகத் தெரியவில்லை. இனிமையான வார்த்தைகளைக் கூறி இந்தியாவின் தயவைப் பெற்றுப் பிழைக்க வழிதேடுவது மந்திரி கோஷ்டியின் நோக்கமா என்ன? நெருப்பில் வேகும் பலாக்கொட்டையை இந்தியாவைக்கொண்டு வெளியில் எடுப்பித்து தாமே சாப்பிட்டுக்கொள்ளப் பிரிட்டன் முயலுகின்றது. இதற்காகத்தான் இந்தியாவிற் பலமற்ற ஒரு மத்திய யூனியனை அமைப்பதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்கின்றது. அதில் இப்போது படுதோல்வியுமடைந்துவிட்டது. அப்படியிருந்தபோதிலும், "தூதுக் கோஷ்டியின் வேலை தோல்வியடையவில்லை. அவர்கள் இந்தியாவை ஏமாற்றமாட்டார்கள். காங்கிரஸ் தலைவர்கள் வெறுங்கையுடன் வரப்போவதில்லை" என்று மகாத்மா காந்தி பிராத்தனைக் கூட்டமொன்றிலே பேசினார்.

—பாகிஸ்தான் பறந்தது—

இந்திய அரசியல் அமைப்புப் பற்றிய வெள்ளை அறிக்கை வெளியாகிவிட்டது. அதனோடு கூட பாகிஸ்தானும் தலையடி பெற்றிருக்கின்றது. இப் புதிய திட்டம் இந்தியாவில் இடைக்கால அரசாங்கம் உடனே அமைக்கவேண்டுமென்பதை வற்புறுத்துகின்றது. மாகாண சுயாட்சியையும் 'யூனியன்' அமைப்பையும் புதிய திட்டம் கொடுத்திருக்கின்றது. "தூதுகோஷ்டியின் அறிக்கை சரித்திரப் பெருமை வாய்ந்தது. பிடித்தாலென்ன பிடியாதிருந்தாலென்ன அதைக் கவனமாக ஆராயவேண்டும்" என காந்திஜி கூறுகின்றார். வகுப்புவாதப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இருவித அரசாங்கத்தை அமைக்கவேண்டுமென்ற கொள்கையை நாங்கள் ஆதரிக்கமுடியாதென இந்திய மந்திரி பெதிக் லோரன்ஸ் வெள்ளை அறிக்கையின் சுருக்கத்தைப் பற்றி டில்லியிற் பேசும்போது குறிப்பிட்டார்.

அறிக்கையின் திட்டங்களையுந் தெரிவித்துள்ளார். இடைக்கால அரசாங்கத்தின் மூழுப் பொறுப்பையும் பாதுகாப்பு உட்பட இந்தியத் தலைவர்களே கையேற்று நடத்துவார்கள். ஆகவே, தூதுக் கோஷ்டியினர் ஆறு புதிய திட்டங்களை இந்தியாவின் பெரும் பான்மைக் கட்சிகளிடம் சமர்ப் பிப்பார்கள்.

புதிய திட்டம்

வெள்ளை அறிக்கையின் சுருக்கமாவது :

1. அந்நியநாட்டு விவகாரம் பாதுகாப்புப் போக்குவரத்து அனைத்தையும் ஒரு யூனியன் கவனிக்கும். இதில் பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் சேரவேண்டும்.

2. பிரிட்டிஷ் இந்திய–சமஸ்தான பிரதிநிதிகள் கொண்ட நிர்வாகசபையும் சட்டசபையும் இருக்கும்.

3. யூனியனிடம் ஒப்படைக்கப்படாத விஷயங்கள் யாவும் மாகாணங்களிடமிருக்கும்.

4. யூனியனிடம் அளிக்கப்படாத அதிகாரங்களனைத்தும் சமஸ்தானங்களிடம் கொடுக்கப்படும்.

5. மாகாணங்கள் சட்டசபைகளுடனும், நிர்வாகசபைகளுடனும் தனிக் கோஷ்டிகளாகச் சேர உரிமையுண்டு.

6. சபையின் அதிகமான வாக்குகளைப் பெற்று எந்த மாகாணமும் பத்தவருடகாலத்தின்பின் தனது நிலையை புனராலோசனை செய்வதற்கு, யூனியனது அல்லது கோஷ்டிகளின் திட்டங்கள் அமைய வேண்டும்.

இந்திய அரசியற் சுதந்தரத்தில் என்றுமேற்படாத நிலை இன்று தோன்றியிருக்கின்றது. வெள்ளை அறிக்கை இந்தியாவை எங்கு இட்டுச் செல்லுமென்பது ஆராயவேண்டிய விஷயம்.

—இ. அ.

பௌத்தமும் வேதாந்தமும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் இந்திய தேசியவாழ்வில் இக்காலமே மிகத் தலை சிறந்து விளங்குகின்றது. இத்தனைக்கும் புத்தபகவானே காரணம்.

"நல்லது செய்; நன்மையாயிரு" என்பது புத்தரின் திருவாய்மொழி. வேதங்களும், வைதீகர்களும் மோட்சத்தையடைவதற்காக யாகங்களைச் செய்யும்படி மக்களைத் தூண்டினர். கீதையில் பகவான் இந்த நோக்கத்தை மிகவும் அற்பமானதென்றும், மனத்தூய்மையுடன் உலகநன்மைக்காகப் பாடுபடுவதே மேல் என்றுங் கூறியிருக்கின்றார்.

"வேள்வி, தானம், தவம் என்னுஞ் செயல்களை விடக்கூடாது; அவற்றைச் செய்ய வேண்டும். வேள்வியும், தானமும், தவமும் அறிவுடையோரைத் தூய்மைப் படுத்துகின்றன." "பாரதா! அறிவில்லாதார் செய்கையில் பற்றுடையோராய் எப்படித்தொழில் செய்கின்றார்களோ, அப்படியே அறிவுடையோன் பற்று நீங்கி உலக நன்மையை நாடித் தொழில் செய்யவேண்டும்" எனப் பகவான்கீதையில் கூறியிருக்கின்றார். இதைப் புத்தர் நியாயசாத்தில் செய்துகாட்டியிருக்கின்றார். அவர், பலருடைய நன்மைக்காகவும், பலருடைய இன்பத்துக்காகவும், தனது வாழ்நாளை அர்ப்பணஞ் செய்தார். ஓர் ஆட்டுக்குட்டிக்காகத் தனது உயிரையுங் கொடுக்கத் தயாராயிருந்தார். அவருடைய பரந்த அன்பானது மனிதருக்குமட்டுமன்றி, விலங்கு, புறவை, தாவரம் என்பனவற்றுக்கும் சொந்தமாயிற்று அவருடைய சுயநலத்தியாகமும், சர்வ சாராசரங்களின் மீதுள்ள பேரன்பும், தயையுமே புத்தபகவான் தற்கால உலகுக்கு அளித்த பெருநிதியாகும். இத்தறையில் இவருக்கு ஒப்பாரும், மிக்காரும், உலக சரித்திரத்தில் இல்லையென்று நிச்சயமாகக் கூறலாம். இவ்வாறு மனம் பற்றியே புத்தருடைய சீவிய சரிதமும், அவருடைய போதனைகளும், மேலைட்டறிஞரின் கவனத்தைக் கவருகின்றன. அமெரிக்காவின் ஜீவகாருண்ய மதமும் (Humanism) புத்தரின் போதனைகளிலிருந்தே உற்பத்தியாகியிருக்கின்றது.

அயல்நாடுகளில் மட்டுமன்றி இந்தியாவிலும் பல கல்விமான்கள் புத்தருடைய போதனைகளிலிருந்து புதிய உணர்ச்சியைப் பெறுகின்றனரென்று பேறிஞர் ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகின்றார். பாரதநாடு சீருஞ் சிறப்பும் எய்தவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஒருபெரிய இயக்கம் தோன்றுகின்ற தற்காலத்திற் புத்த பகவானுடைய போதனைகளாகிய சுயநலமற்ற அன்பும் சேவையும் மிகவும் வேண்டப்படுகின்றன.

இந்தியா தனது முழுவளர்ச்சியையடையவேண்டுமாயின் அது புத்தருடைய போதனைகளை உணர்ந்து அவரின் நெறியைப் பின்பற்றி நடக்கவேண்டும். கடவுளைப் பொருட்படுத்தாத காரணத்தினாலே புத்தரை நாஸ்திகனென்றும் லோகாயதனென்றும் பலர் கூறினர். ஆனால் அத்தகைய நாஸ்திகனே ஒரு ஆட்டுக்குட்டியின் உயிருக்காகத் தன் உயிரைத் தியாகஞ் செய்யத் தயாராயிருந்தார். எந்தச் சாதியாரும் போற்றத்தக்க தூய அறநெறியை அந்தப் பெரியாரே முதன் முதலாக ஏற்படுத்தினார். நீதிநெறி எங்கேயிருப்பினும் அது புத்த பகவானுடைய சூரியனின் ஒரு கதிரென்றே கூற வேண்டும். நூறு ஆண்டுகளுக்கு முன் கனக்கமுடியாத விஞ்ஞான சாஸ்திர விருத்தி நிரம்பப்பெற்ற தற்கால உலகில், பரந்த நோக்கும் விரிந்த சிந்தையும் உடைய மகா புருஷர்களை நாம் குறுகிய எல்லையுள் அடக்கி வைத்து விடமுடியாது. நீங்கள் மகிதனக்குறிய கெல்லையை அவரது சிந்தனை சக்தியை யழித்தி மிருகங்களாக்குகின்றீர்கள். அவர்களுடைய தூய வாழ்க்கைக்கு உலைவைத்துவிடுகின்றீர்கள். பரந்த மனமும் ஆழ்ந்தஅறிவும் நிறைந்த நிலையே இப்பொழுது வேண்டற்பாலது என சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கின்றார்.

புத்த பகவான் தர்மோபதேசஞ் செய்தகாலத்து இந்தியர் எப்படி அவருடைய போதனைகளை அங்கீகரித்துவந்தார்களோ, அப்படியே இக்காலத்திலும் அவர்கள் மதிப்புக் காட்டுகின்றனர். ஆனால் சங்கராச்சாரியாருடைய காலத்துக்கு முன் புத்தருடைய போதனைகளுக்கு இத்தகைய மதிப்பிருக்கவில்லை. அக்காலத்தில் கிரியாமார்க்கம் தலையெடுத்த காரணத்தினாலே இந்தியர் புத்தரையும் அவருடைய போதனைகளையும் புறக்கணித்துவிட்டு, யாகம், வேள்வி முதலிய பழைய கொள்கைகளைக் கைப்பற்றினர். இதனால் சந்தை சீர்கேடுற்றது. கலி இன்னும் நீங்கியபாடில்லை. சமுதாய முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போன்றிருக்கும் வைதீகருடைய குறுகிய மனப்பான்மை புத்தரின் கொள்கைகளை மறுத்த காரணத்தினாலே ஏற்பட்டதாகும். அருட்பெருங் கடவுள் புத்தாவதாரமெடுத்து மக்களுக்குப் போதித்தார். ஆனால் அவர் பொய்ப் போதனைகளைப் போதித்த அசுர சுபாவமுடையவர்களை ஏமாற்றுவதற்காக அவதாரஞ் செய்தாரென்று வைதீகர்கள் கதைகட்டிவிட்டனர். உண்மையை உற்று நோக்குவோமாயின் நாங்கள் தான் அசுரர்களாவோம். யூதர்கள் தங்களை இரட்சிக்க அவதாரஞ்செய்த கிறிஸ்துநாதரை மறுத்துவிட்டு, மறுத்தநாள் முதற்கொண்டு தங்க இடமில்லாது, நாடோடிகளாகத் திரிந்துகொண்டு எல்லோருடைய அதிகாரத்துக்கும் உட்பட்டு நிற்கிறார்கள். அவர்களைப்போலவே நீங்களும் புத்த பகவானை அவமதித்துவிட்டு உங்களை ஆளவந்தவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறீர்கள் என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கின்றார்.

இந்தியா தனது ஏமாற்றத்துக்காக மிகவுஞ் சங்கடப்பட்டிருக்கின்றது. இன்று காலநிலைமை முற்றும் மாறிவிட்டது. விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்தியானது பழைய கொள்கைகளைப் புதியதாயமைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி, தேசிய, சமுதாய, மத, நோக்கங்களில், மாற்றங்களையும், திருத்தங்களையும் ஏற்படுத்த அடிகோலுகின்றது. பரம்பரைப் பழக்கவழக்கம், அதிகாரவர்க்கம், என்பன மறைந்துவிட்டன. தற்காலத்துக்கேற்ற தத்துவசாஸ்திரக் கொள்கையானது, சாதாரண அறிவையும், மனோதத்துவ சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட தூய வாழ்க்கை நெறியையும், ஆதாரமாகக்கொண்டிருத்தல் வேண்டும். மேலைட்டு அறிஞரில் பலரும், தற்கால இந்தியாராட்டறிஞரும் இவ்விரண்டு ஆதாரங்களையும் வேதாந்தக் கொள்கையிலும் புத்தருடைய போதனைகளிலுமிருந்து பெறுகின்றனர். இக்காலத்தில் புத்தபகவான் ஒரு அஞ்சாநெஞ்சமுடைய இந்திய மத சீர்திருத்தக்காராகவும், பகுபாத மற்ற பேரறிஞனாகவும் விளங்குகின்றார். அவர் உபநிடதங்களின் கருப்பொருளையும், கீதையில் கூறப்பட்டுள்ள நிஷ்காமியகர்மத்தையும் விளக்கிக் கூறியிருக்கின்றார்.

உபநிடதம், கீதை முதலியன கூறும் உயர்ந்த வேதாந்தக்கொள்கை ஒரு புறமும், கௌதம புத்தருடைய வாழ்வும், சிறந்த போதனைகளும் மற்றொரு புறமுஞ் சேர்ந்து இந்திய சீர்திருத்தத்துக்கும், புதிய அமைப்புக்கும் அருந்தொண்டாற்றும் இயக்கங்களுக்குக் காரணமாயிருந்தன. உபநிடதங்கள் கூறும் சாராசரங்களின் ஒருமைப்பாட்டுக் கொள்கையும், இந்த ஒருமைப்பாட்டை வாழ்வில் உணரும்படி வற்புறுத்தும் கீதா போதனைகளும், இந்தியாவிலும் பிறநாடுகளிலும், தற்கால மக்களின் மனதைக் கவருகின்றன. இந்த ஒருமைப்பாட்டை அநுபவத்தில் உணர்ந்தவர்களுள் தலை சிறந்த வி
வான். உண்
ஞானியானவன்
வனுய் தனக்குத்த
செய்வதில்லை; ஆத
உயர்ந்த இலட்சியத
கின்றான். புத்தருடை
கையானது இந்தக் கீதா
பங்களுக்கு வியாக்கியானம
ன்றிருக்கின்றது.

பாரதநாட்டின்பல்வேறுசங்கடங்களைத்தீர்க்கும்முயற்சியானதசர்வதேசத்தாருக்கும், சாதியாருக்கும் நன்மை பயப்பதாயிருக்கும். மனிதவர்க்கத்தின் ஐக்கியத்தை நாம் புறக்கணிப்போமானால் நமக்கு அபாயமேற்படுமென்று தற்கால உலகம் நம்மை எச்சரிக்கை பண்ணுகின்றது. இந்தியாவிலும் ஏனைய உலகின் பலபாகங்களிலும் நிகழும் சத்தம் சந்தடிகளுக்கிடையே, ஒரு மெல்லிய தொனியானது நமது காதுகளில் சப்திக்கின்றது. பலர் அதைக் கேளாமலிருக்கலாம். ஆனால் அதைக் கூர்ந்து அவதானித்த சிலருக்கு அண்டசராசரங்களின் ஒருமைப்பாட்டின் அந்தரங்க உண்மை தெள்ளிதில் புலப்படும். உண்மையில் நாமெல்லோரும் ஒன்று; ஒரேதன்மையுடையவர் என்பதே வேதாந்தத்தின் மூலசாரம். நமது ஆழ்ந்த அந்தரங்க அடிப்படையை உணராத காரணத்தினாலேதான் நான் என்றும், பிறனென்றும் வித்தியாசம் ஏற்படுகின்றது. நாம் எல்லோரும் ஒன்றாயிருந்தாற் சண்டையெழுவதெங்ஙனம்? அப்படி உண்டாகினும் அது தற்கொலை செய்வதற்குச் சமானமாகுமல்லவா? ஏனெனில் மானிடர் ஒன்றல்லவா? இந்த மெல்லிய தொனியானது இப்பொழுது வலிமைபெற்று உலகமெங்கும் பேரொலியாக ஒலிக்கவேண்டும். உலகைப் பீடித்திருக்கும் நோயைத் தீர்ப்பதற்கு இதே சிறந்த ஔடதம். அதன் சமாதானத்துக்கும் இதே அடிப்படையாயிருக்கின்றது. தற்காலத்தில் வேதாந்தக் கொள்கையைத் திறம்பட எடுத்து உலகெங்கும் பறைசாற்றிய சுவாமி விவேகானந்தர் அக்கொள்கையின் உயிர்ச் சக்தியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "எங்களிடமிருந்து உலகம் எதிர்பார்க்கும் மற்றக் கொள்கை வேதாந்தக் கொள்கைதான். அண்டசராசரங்களெல்லாம் ஒன்று என்னுங் கொள்கையானது, உயர்ந்தோர், கல்விமான்கள், பலசாலிகள் என்பவர்களைப் பார்க்கிலும், தாழ்ந்தோர், அறிவிலிகள், பலவீனர்கள் என்பவர்களுக்குத்தான் அவசியம் வேண்டியிருக்கின்றது. அண்டத்தின் அமைப்புக்கு அடிப்படையாயிருக்கும் அந்தச் சிறந்த கொள்கையானது, இந்திய நாட்டிலும் பலரைப் பயமுறுத்திற்று. இப்பொழுதும் அக்கொள்கையை எதிர்ப்பவர்கள் பலர் இருக்கின்றார்களேயன்றி, அதைப் பின்தொடர்பவர்கள் மிகச் சிலரேயாவர். அது எப்படியிருந்தபோதிலும், உயிருக்கு உறுதிபயக்கும் அக்கொள்கையை மட்டுமே உலகம் நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றது, அதுமட்டுமா? அப்பிராணி போன்றிருக்கும் இந்திய பாமர சனங்கள் முன்னேறுவதற்கும் அதுதான் வேண்டியிருக்கின்றது. வேதாந்தக் கொள்கையைக் கிரியாம்சத்தில் நாம் கைக்கொள்ளாவிடின் நமது தேசத்துக்குப் புத்துயிரளிக்க ஒருவராலும் முடியாது. இந்தச் சராசாங்களின் ஒருமைப்பாட்டுக் கொள்கையே எல்லா நீதி சாஸ்திரங்களுக்கும் ஆதிமீக வாழ்வுக்கும் அஸ்திவாரமாகும்."

விளம்பரம்

சங்கீதந் தெரிந்த பயிற்சி பெற்ற ஆசிரியை தேவை. விண்ணப்பங்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-5-46 வரையும் ஏற்றுக் கொள்ளப்பெறும்.

இ. சோமசுந்தரம்,
முகாமைக்காரர்.

கொழும்புத்துறை
சைவ வித்தியாசாலை.
15.5.46 (2765-ii)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரபர்களுக்கு—XI "சுயா"

ரியரின் வேலைநிறுத்தம்?

ரதெடா இது! எல் பரும் புதுமையாயிருக்கே! ாஷா பாடசாலை ஆசிரியரா து வேலை நிறுத்தம் செய்வ தாவது! கண்டவர்களுக்கெல்லாம் கூழைக் கும்பிடு போட்டுக்கொ ண்டு பயந்து ஒடுங்கிக் கிடக்கும் இவர்களுக்கும், வேலை நிறுத்தம் செய்யக்கூடிய அத்தனை அணி வும் ரோஷமும் வந்துவிட்டதா!" என்று நீங்கள் கைகொட்டிச் சிரிப்பீர்களாக்கும். நீங்கள் எப் படி வேண்டுமென்றாலும் சொல் லிக்கொள்ளுங்கள். நான் சொல் வது என்னவென்றால்: இன்னும் சுயபாஷா பாடசாலை ஆசிரியர் கள் வேலை நிறுத்தம் செய்து விடவில்லை. வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்ற மனம் கொதித்துக் கொண்டிருக்கிறார் கள் என்பதுதான்.

பழைய காலத்துச் சட்டம்பி மாரல்ல இப்பொழுதிருக்கும் சுய பாஷா பாடசாலை ஆசிரியர்கள். எல்லாரும் சிங்கங்கள். யாரே னும் சட்டம்பியார் என்ற சொல் வதைக் கேட்டாலே அவர்களுக் குக் கோபம் வந்துவிடும். அப்ப டிச் சொன்னவரின் மென்னி யைப் பிடித்துக்கொண்டு, 'மாஸ் டர்' அல்லது சார் என்று சொல்லு, என்று சொல்லி அப் படிச் சொன்னவரின் அடுக்கை அடக்கிவிடக்கூடிய அவ்வளவு ரோஷமுள்ள வாலிபர்கள் அநேகர் இக்காலத்தில் சுயபாஷா பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருக்கின்றனர். வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று சொன் னதுமே எப்பொழுது ஆரம்பிக் கப்போகின்றீர்கள்? ஏன் இன் னும் தாமதம் செய்கின்றீர்கள் எனறு படபடக்கின்றார்கள் அவர் கள். "உங்களால் ஆகாவிட்டால் சொல்லுங்கள்; நீங்கள் எல்லா ரும் போய் மூலையில் ஒழிந்து கொள்ளுங்கள்; நாங்களாகவே இந்த வேலை நிறுத்தத்தில் ஒரு கை பார்த்து விடுகின்றோம்; ஆனால் இப்படிப் பயந்து ஒடுங் கும் உங்களுக்கு எந்தத் தப்புக் கெட்டவள் ஆக்கிப்போடுகின்ற ளோ அதையுந்தான் பார்த்து விடுகின்றோமே!' என்று ஆண் ஆசிரியர்களுக்குச் சவால் விடுத் தக்கொண்டு, பெண் ஆசிரியர் கள்கூட இந்த வேலை நிறுத்தத் தில் முனைந்து நிற்கின்றார்களென் றால் அப்புறம் நான் சொல்லக் கிடப்பது என்ன?

தன் பெலத்தைத் தான் அறி யாதவனும் இராம நாதவன் அநுமந்தன். அது போன்றவர்கள் இந்தச் சுயபாஷா பாடசாலை ஆசிரியர்கள். அவர்கள் பலத்தை அவர்கள் அறியாதவர்கள். ஒரு தேசத்தில் சத்புருஷர்களைச் சிருஷ்டிக்கும் சிருஷ்டி கர்த்தாக் கள் இவர்கள்தான். அரசாங்க சபை முதல்வர் சேனநாயக்கா வின் குழந்தையென்றாலென்ன, பேரக் குழந்தையென்றாலென்ன, கல்வி மந்திரி கன்னங்கரா அவர் களின் சிறுவர்களென்றாலென்ன, அரசாங்க சபை அங்கத்தவர் நடேசபிள்ளை அவர்களின் குழந் தையென்றாலென்ன, எல்லாரும் ஒரு முறை இந்தச் சுயபாஷா பாடசாலை ஆசிரியர்களின் கைக் குப் போய்வாதான் வேண்டும், பிரம்படியும் பட்டே தீரவேண் டும். இவர்களின் குழந்தைகள் தம் கையில் வந்தவுடன் இந்த ஆசிரியர்கள் இவர்களைக் கெடுக்க விரும்பினாற் கெடுக்க முடியாதா? சின்ன உள்ளங்களிற் தூர்ப்புத் தியைப் புகட்டி அவர்களை ஒன் றுக்கும் உதவாதவர்களாய் செய்ய வேண்டுமென்று இந்த ஆசிரியர் கள் விரும்பினாற் செய்யமுடி யாதா? அப்படி எந்த ஆசிரியனு வது இதுவரை செய்ததுண்டா? எல்லாக் குழந்தைகளையும் நல் வழிக்குக் கொண்டுவந்து விட வேண்டுமேயென்று, அல்லும் பகலும் உழைத்து, உழைத்துச் சத் புருஷர்களை ஒரு காட்டிற் குச் சிருஷ்டிப்பதில், எக்கமும் கவலையும் கொண்டு கிடக்கின்ற வர்கள் இவர்களிடை வேறு யாருமுண்டாவென்று நான் கேட் கின்றேன். இவ்வளவோடு எங்கள் இலங்கைத் தேசத்தின் சுயபாஷா பாடசாலை ஆசிரியர்களின் வேலை நின்றுவிடவில்லை. அரசாங்க சபைக்கு ஒருவர் அபேட்சகராய் வெளிவந்துவிட்டால், அவர் ஒடி வந்து காலைப்பிடிப்பது இந்தச் சுயபாஷா பாடசாலை ஆசிரியர் களைத்தான். உத்தியோக உயர் வை விரும்பும் ஒரு இன்ஸ்பெக் டர் கார்ணிவலோ, கல்லெடுப்போ ஏதுமொன்று நடத்தித் தன் பெயரைப் பிரசித்தப்படுத்த விரும்பினால், அவர் ஓடி வருவ தும் இவர்களிடம்தான். ஒரு சுகாதார இன்ஸ்பெக்டர் தங்க மெடலோ, தாயத்தோ பெற விரும்பினால், அவர் வந்து நாடி யைப்பிடிப்பதும், இந்த ஆசிரி யர்களையே. நாட்டில் குடிசன மதிப்பு எடுக்கவேண்டுமென்றா லும் இவர்கள்தான் முன்வர வேண்டும். கமத்தொழில் விர்த் திக்கு உழைக்கவேண்டுமென் றாலும், இவர்களையின்றி எதுவும் முடியாது. சுருக்கமாகச் சொன் னால் இந்தச் சுயபாஷா பாட சாலை ஆசிரியர்களின் உதவியில் லாமல் இந்த இலங்கைத் தேசத் தில் எதுதான் நடைபெறுகின் றது என்று கேட்கின்றேன்! எல்லாம் இவர்களால் நடைபெற் றாலும், இவர்கள் மாத்திரம் தங் களைப்பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்வதே கிடையாது. இவை யெல்லாம் எங்கள் கடமைகள். ஒரு நாடு செழிக்கவேண்டு மென்றும், அந்நாட்டில் நன்மக்கள் உற்பத்தியாகவேண்டும்; எங்கள் தொழில் மகோன்னதமானது; உத்தரவாதமானது; நாங்கள் டிக் கெட்டுகளைக் கடகடவென்று அடித்து எறியும் ஸ்ரேஷன் மாஸ்ரர்மாரையும், தபாற்தலை ளிற் சீலடிக்கும் போஸ்ற் மாஸ்ரர்மாரையும், சும்மா புள்ளி விபரங்களைக் கூட்டிக்கழித்துக் கொண்டு கிடக்கும் கிளேறிக்கல் சேவன்ற்மாரையும் போன்றவர்க ளல்ல; நாங்கள் தினமும் உயி ருள்ள ஜீவன்களோடு வாழுகின் றவர்கள். எங்கள் தொழில் பயங் கரமானது; கடவுள் சமூகத்தில் கணக்குக் கொடுக்கவேண்டியது; இதிற் பெருமைப்பட இடமே கிடையாது; பயப்படவேண்டுமே தவிர நாங்கள் பெருமைப்படக் கூடியவர்களல்ல என்று எண் ணிக்கொண்டு, அவர்கள் சாதிக்க ளாய்த் திரிவதைப் பார்த்த சில ரின் கிறுக்குப்பிடித்த தலைகளில் இவர்களைப்பற்றிய சிந்தனையே உண்டாவதில்லை. இவர்கள் தங் கள் மகா பெரும் கடமையை யுணர்ந்து, சாதிக்களாய்த் திரி யத்தொடங்கிய, மற்றவர்களோ, இவர் களைப் பயந்தவர்கள், ஒன்றுக்கு மாகாதவர்கள் என்ற தப்பாய் எண்ணிக்கொண்டு, பெரும் தட புடல் பண்ணத் தொடங்கி விடு கின்றார்கள். இந்தமுறைதான், சுயபாஷா பாடசாலை ஆசிரியர் கள் தங்கள் சுயரூபத்தையும், வல்லமையையும் எல்லாருக்கும் காட்டிவைத்து விடவேண்டு மென்று சொந்தளிக்கின்றார்கள். சாதுமிரண்டால் மகாமோசமென் பார்கள். இந்தச் சாதிக்களும் மிரளத் தொடங்கிவிட்டார்கள். இது எந்த அளவிற் போய் முடியுமோ என்னுற் சொல்ல முடியாது. இதற்கெல்லாம் காரண மென்னவென்று கேட்பீர்களோ? எல்லாம் "சலறிக் கொமிஷ னின்" அநியாயமான செய்கை தான். யுத்தகாலத்தில் தங்கள் தங்கள் வேதனம் போதாதென்று அரசாட்சி யுத்தியோகஸ்தர் முதல் எல்லாரும் அரசாட்சியா ருக்கு முறையிட்டுக்கொண்டனர். உடனே அரசாங்கத்தார் ஒரு கொமிஷனை நியமித்து ஒவ் வொரு பகுதியாரினதும் சம்பள விகிதத்தை ஆராயும்படி செய் தனர். அந்தக் கொம்மிஷனே சாதாரண பொலிஸ்காரன் தொ டங்கிச் C. C. S. வர்க்க மீறுக வுள்ள எல்லாருக்கும் தாராள மாக அள்ளிக்கொடுக்க வேண்டு மென்று சிபார்சு செய்தது. ஆனால் அந்தக் கொம்மிஷன், இந்தச் சுயபாஷா பாடசாலை ஆசிரியர்கள் விஷயத்தில் மாத்தி ரம் கருமித்தனம் செய்துவிட் டது. இது அவர்களின் துவேஷ புத்தியோ, அல்லது மௌட்டிக மோ, அல்லது பொறுமையோ எதுவென்று என்னுற் சொல்ல முடியவில்லை. இந்தத் தப்புக் கெட்டவர்களின் மகாமோசமான, அருவருக்கத்தக்க செய்கையைக் கண்டபின்பும், ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு மூலகாரணமான கல்வியபிவிருத்தியில் ஈடுபட்டி ருக்கும், இந்தச் சுயபாஷா பாடசாலையாசிரியர்கள் சும்மா இருப்பார்களா? "கற்பிக்கின் றோம் எல்லாருக்கும் புத்தி" என்று புறப்பட்டுவிட்டார்கள், ஆனசமயத்தில் அரசாட்சியார் விழித்துக் கொள்ளாவிட்டால், வேலை நிறுத்தம் செய்துவிட்டு, அரசாட்சியார் நிவர்த்திக்கச் சொல்லுமுன்னம் நிபந்தனைகள் யெல்லாம் லிஸ்தலிட்டுப் பேசா மலிருப்பார்களா போலிருக்கின்

SAMUEL SONS & Co., Ltd.,

HOSPITAL ROAD, JAFFNA

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST.,

COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
நிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

● கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்சாலை
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வாணிஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்

ஆம்பத்திரிரோட் : : யாழ்ப்பாணம்

தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

2740

ஆசிரியருக்குக் கடிதங்கள்

புதிய சம்பளத் திட்டம்

கடந்த மகாயுத்தத்தின் பின்னரேற்பட்ட பொருளாதார மந்தத்தைப் போக்கும்பொருட்டு ஒவ்வோர்நாடும் புதிய திட்டங்கள் வகுத்தன. ரூஷியா ஜனநாயக த்தை அடிப்படையாகக்கொண்டு ஒரு திட்டத்தை வகுத்தது. ஜேர் மனி முதலாளித்துவத்தை அடிப் படையாகக்கொண்ட ஒரு திட் டத்தை வகுத்தது. இவ்விரு திட் டத்திலுஞ்சும் இருநாடுகளும் எ னேயநாடுகள் அதிசயப்படத்தக்க முன்னேற்றமடைந்தன. ஆனால் இன்று நடந்திருப்பதென்ன! முதலாளித்துவத்தை அடிப்படை யாகக்கொண்ட ஜேர்மனியின் எழுச்சி மண்ணோடு மண்ணாகி விட்டது. பொதுவுடமையில் வே ரூன்றிய ரூஷியா வல்லரசானது மன்றி உன்னதநிலையிலிருக்கின் றது. இத்தனைக்கும் மக்களின் ஆட்சியே காரணம்.

சுயாதீனநாடுகளிலும் அடிமை நாடுகளிலும் இத்தகைய பொரு ளாதாரச் சிக்கல்கள் ஏற்படுவதி யல்பு. சுயாதீனநாடுகளில் அவற் றைத் தீர்த்துக்கொள்ளுதல் எளி தானது. ஆனால் அடிமைநாடு களில் அவற்றை நிவர்த்திப்பது மகாகஷ்டம். ஏனெனில். ஆ ளுகையைக் கருதாது வருவாயைக் கருதும் அரசாங்கங்கள் நாட்டின் பொதுவான நலனைக் கருதுவதி ல்லை. சமீபத்தில் நிகழ்ந்த உலக மகாயுத்தத்தினால் சகலநாடுகளி னதும் பொருளாதார நிலை சீர் குலைந்துவிட்டது. இதுகாரண மாக ஒவ்வோர்நாடும் யுத்தபிற் காலத் திட்டங்களை வகுக்க முற் பட்டிருக்கின்றது. இலங்கையும் திட்டம் வகுத்து எழுதவதில் பெரிய முயற்சி செய்கிறது. அடி மை நாடாயினும் இலங்கையர் களாகிய மந்திரிகளால் நிர்வகிக்கப் படும்நாடு முதலாளித்துவத்தை அடிப்படையாகக்கொண்டு ஒரு சம்பளத்திட்டத்தை வகுத்துள் ளது. சுயபாஷா ஆசிரியர்களுக் குக் குறைந்த சம்பளத் திட்டம் வகுக்கப்பட்டதைப்பற்றி விசாரி த்தபோது மந்திரிமாரில் சிலர் கூறியஅபிப்பிராயங்கள் வருமாறு: "அரசாங்க லிகிதர்களின் தொ கை கிட்டத்தட்ட 3000. ஆசிரி யர்களின் தொகை 24000 க்கு மேற்பட்டதாயிருப்பதால் அரசா ங்க லிகிதர்களைப்போல ஆசிரியர் கட்கும் சம்பளத்தை உயர்த்த முடியாது" இது உள்நாட்டு மந் திரியவர்கள் வெளியிடும் அபிப் பிராயம். சம்பளத்திட்டம் வகுப் பது வாழ்க்கைச் செலவுகளை அ டிப்படையாகக்கொண்டும், கல் வித்தரங்களைக் கருதியுமென்பது பலரறிந்த உண்மை. அரசாங்க லிகிதர்களுக்கும் ஆசிரியர்களுக்கு முள்ள கல்வித்தரதத்தை எடுத்த விளக்கிய பின்னும் மந்திரியவர் கள் மேற்போந்த அபிப்பிராயத் தையே மீண்டும் கூறினர். கல்வி, வாழ்க்கைச்செலவு என்னு மிரண்டையு மொழித்த உத்தி யோகத்தர்களின் தொகையிலி ருந்து சம்பளத்தை வகுப்பது பொருளாதாரக் கொள்கைக்கு இயைந்ததா? இயையுமென்பா ராயின் அவர் கொள்கை முதலா ளித்துவமே. 1939-ம் ஆண்டில் மூன்றாம்வகுப்பு எழுதாளர்க் குக் கொடுக்கப்பட்ட சம்பளம்

ரூபா $\frac{40—100}{2\frac{1}{2}}$

அதேகாலத்தில் பயிற்றப்பட்ட உதவியாசிரியர்கட்குக் கொடுக்கப் பட்ட சம்பளம் ரூபா $\frac{43—100}{3-4}$

அதேயாண்டில் இலங்கையிலுள்ள எல்லா ஆசிரியரினதும் தொகை 21570. இப்போது திருத்தியமை க்கும் சம்பளத் திட்டத்தின்படி பொது எழுத்தாளர்க்குச் சம்பளம் ரூபா $\frac{70—202}{6}$ பயிற்றப்பட்ட ஆசிரியர்கட்குரிய சம்பளம் ரூபா 65-50—131-50. 1945-ம் ஆ ண்டில் இலங்கையிலுள்ள எல்லா ஆசிரியர்களினதும் தொகை 24200. ஆகவே கடந்த எழுவரு டங்களிலும் ஆசிரியர்களின் தொ கை அதிகம் கூடிய விகிதத்தால் அதிகரிக்கவில்லையென்பது பெ றப்படும். ஆசிரியரின் தொகை அதிகரித்த விகிதத்தில் எழுத்தா ளரின் தொகையும் மிகுந்ததெ னல் மிகையாகாது. எனவே 1939-ம் ஆண்டில் கிட்டத்தட்ட ஒரே சமமான சம்பளத் திட்டம் பெற்ற இருவகுப்பினரும் இப் போது மிகப்பெரிதும் வித்தியாச மான சம்பளத்தைப் பெறுவதற்கு ஆசிரியர்களின் தொகை அதிகரி த்தது காரணமாக மாட்டாது. உத்தியோகங்களைத் தனித் தனி வகுத்து உத்தியோகத்தர்களின் தொகைக்கேற்பச் சம்பளம் வகுப் பதாகக் கூறும் மந்திரியவர்கள் உணவு விஷயத்திலும் உடை வி ஷயத்திலும் உத்தியோகவாரியா கவும் மாகாணவாரியாகவும் பிரிவு களேற்படுத்த முற்படுவாரா?

2. கல்வி மந்திரியவர்கள் ஆ சிரியர்களின் சம்பளத்திட்ட வி ஷயமாக கூறுவன வருமாறு: 'இலங்கையிலுள்ள உத்தியோ கங்களெல்லாம் சில வகுப்புக் களில் வகுக்கப்பட்டுப் புதிய சம் பளத்திட்டம் ஒழுங்கு செய்யப் பட்டது" என்பது மந்திரியவர் கள் கூறும் நியதியில் புதிய சம்ப ளத்திட்டம் வகுக்கப்பட்டதெ னில் பயிற்சிபெற்ற சுயபாஷா ஆசிரியர்கள் பொலிஸ் உத்தியோ கஸ்தர்கட்குச் சமமாகவும், பயிற் றப்படாத ஆசிரியர்கள் அரசாங் கத்திலிருக்கும் சேவகர்கட்குச் சமமாகவும் கருதப்பட்டிருக்கிறார் களென்பது சம்பளத் திட்டத்தி லிருந்து பெறப்படுகிறது: ஆசிரி யர்களும் அவர்க்குச் சமமாகக் கருதப்படும், மற்றைய உத்தியோ கஸ்தர்களும் கல்வியிலும் உத்தி யோகக் கருமங்களிலும் எவ்விதம் வேறுபட்டிருக்கிறார்க ளென்பது

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

அந்த இரவு

எம். எஸ். கமலா

இயற்கையின் அமைதியில் ஜீவராசிகள் அமிழ்ந்திருக்கையில் நக்ஷத்திரக் கூட்டங்கள் கண்சிமிட்டிச் சிமிட்டிக் காதல் செய்துகொண்டிருந்தன.

பணக்காரர் திருப்தியற்ற முகங்களுடன், அன்பிற்காக அலைந்து திரிந்தால், தயையற்றவர்கள் 'நாளைக்கோ பண்டிகைநாள்' என்று கனவு கண்டு கொண்டிருந்தனர்.

வெண்ணிலா பரந்த உலகில் விரிந்துகிடந்தது. எடுப்பாரற்று, பிடிப்பாரற்று, உலகைமுழுவதும் கனிந்த காதல் ரஸத்தில் மூழ்கடிக்கச்செய்து, அம்ருததாரையைப் பிழிந்துகொண்டிருந்தது, அப்போர்ப்பட்ட நிர்மல நிலவு என்னை ஏனோ நித்திரையிலாழ்த்தாமல் வேதனையிலாழ்த்தியது?

மதுர ராத்திரியில் மயங்கிய படியே எங்கள் வீட்டின் முன்புறமிருக்கும் 'அமராவதி'க்கரையை நோக்கி நடந்தேன். வேதனை உள்ளத்தில் ஏதோ ஒரு பயம் தோன்றி, நிராசை நோயைப் போக்கத் தகுந்த மருந்தைத்தேட என் மனம் நாடியது.

அவசர அவசரமாய் கரையை அணுகினேன். அங்கு நதிக்கரையிலிருக்கும் மரத்தின்கீழ், ஓர் அகல் விளக்கு அந்திம காலத்தை அறிவிப்பதுபோல் ஒருதரம் மின்னி மறைந்தது. கங்கை கர்ப்பத்தில் சலசல வென்னும் சத்தம் மிருத்யுநாதத்திற்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்தது. காலருகில் ஓர் அநாதைப்பிணம். அதைக் கரையருகில் இழுத்துப்போட்டேன்.

எனது முயற்சி வீணுயிற்று. அதில் பலிதமில்லை. நிஷ்பலம் தான் மிஞ்சியது. அந்த அநாதைப்பிணத்திற்குப் பூரண சந்திரன் எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறான். என் கண்களிலிருந்து இரண்டு துளி கண்ணீர் அந்த சடலத்தின்மேல் விழுந்து வீண்டு சிதறின. நான் வெறி பிடித்தவள்போல் வீட்டுக்கு ஓடினேன். சாந்தியைத் தேடிச் செல்ல வருத்தம் வருந்தியழைப்பதாயிற்று. கட்டிலிற் சாய்ந்தேன். கண்களை மூடலாமென்றால் அது முடியவில்லை!

இந்த அநாதைப்பிணம், அற்புத நக்ஷத்திரம்போல் மின்னிக் கொண்டு, கண்ணீருடன் தென்பட்டது. "யார் நீ"? என்றேன்.

"அம்மா! இந்தப் பரந்த உலகில் ஒருவருக்கும் உதவாத அநாதை நான். இத்தனைநாள் என் துயரை கேட்பாரில்லாமல் என் வேதனை அலைகளை என்னுள் அடக்கிக்கொண்டு அவஸ்தைப்பட்டேன். இப்பொழுது உன் வாழ்நாட்களிற் சில நிமிஷங்களாயினும் எனக்காகத் தியாகம் செய்ய நினைத்த உன்னிடம் என் துயரைச்சொல்லி துக்கத்தைக் குறைக்கலாமென வந்தேன்..."

"சொல்லு தாயே", என்றதும் அது தனது துயரக் கதையை ஆரம்பித்தது.

"நான் என்ற மமதையுடன் 'யௌவனம்', என்ற மினுமினுப்பு என்னை அணைத்துக் கொண்ட காலத்தில், நான் சமூகத்தைத் துறந்தேன். இப்போது கண்ணீர் வடித்துக் கொண்டு நிற்கும் கைம்பெண். நான் எந்த அனுபவத்திற்கு விலக்காக...எந்த ஆனந்தத்தை கனவிலும் ஏற்கக்கூடாதென்று ...வாழ்க்கை முழுவதும் அடிமையாகயிருக்க வேண்டுமென்று...அடிமையாய் வாழ்நாட்களைக் கடத்தும் விந்தை யந்திரங்களாய் தயார்செய்த சாஸ்திரங்கள்...கொள்கையில் கையாள்கின்றனவோ.....அந்தச் சட்டம்...சாஸ்திரம்.....என் மேல் பிரயோகிக்கப்பட்டது.

"கடமையைப் பின்பற்ற அறியாத என் இளம் உள்ளம் அனுசிதமான வழிகளில் நாடத் தொடங்கியது.

"யௌவனம் ஆனந்தசிகரங்களில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தது. ஜீவன் துடிதுடித்துக் கொண்டு...சங்கம்...? சமூகம்...சட்டம்...??? ஆசாரம்...? சீலம்.....?? என்று ஒருங்கே கூக்குரலிட்டபடியிருந்தது.

"விதியோ 'எதிர் நிரும்பி எக்காளமடித்து கொக்கரிப்பேன்' என்றது.

* * *

"என் விதியின் விளையாட்டினால் உலகம் காக்காய்களாகக் கத்தின. என் சரித்திரம் எங்கும் தொனித்தது. சமூகம் என்னை வெளியேற்றியது. விபசாரத்தின் அறிகுறியாகக் கருத்தரித்தேன்.

என்னுடையவர்கள் என்றில்லாத என் வாழ்க்கை அக்கினிக்குத் துணையாக ஊற்றப்பட்ட நெய்யைப்போல் என் கருவிலிருக்கும் சிசு எல்லோரையும் என்பால் எரிந்து விழும்படி செய்தது. இந்த அருவருப்பான வாழ்வின்மேல் வெறுப்புத் தோன்றித் தற்கொலை செய்து கொள்ள நினைத்தேன். ஆனால் வாழ்க்கையின் மமதை என்னை இறக்கவிடாமல் ஆசைகாட்டி உயிருடன் இருக்கச் செய்தது.

"என் ரோஷம் கொண்ட மனது என்னை அவ்வூரில் இருக்கவிடாமல் இவ்வூருக்கு இழுத்து வந்தது. பிச்சைத் தொழிலுக்குப் பசிப்பிசாசு வழிகாட்டியது. என் கஷ்ட வழியில ஒரு வருடம் திரும்புவதற்குள் நான் ஒரு சிசுவின் தாயானேன். நான்கு மாதங்களுக்குள் வயிற்றிற்கில்லாமலே அந்தச் சிசு வந்த வழியை பார்த்துக்கொண்டு போய்விட்டது..." என்று சற்று மௌனமாயிருந்தது.

"ஊம்" என்றேன்.

"இன்னும் என்ன இருக்கிறதம்மா! என் வாழ்வின் சர்வத்தையும் எதற்களித்து.... இந்த நீச வாழ்க்கையில் வாழ்கிறேனே; அந்த ஆசை நிராசை ஆகிவிட்டது. நிராசை நிரம்பிய உலகம் இருள் சூழ்ந்திருந்தது. அந்தக் காரிருளில் என் குழவியைப் பிழைக்கச் செய்து எனக்கு வழி காட்டும் தியாக மூர்த்திகள் ஒருவருமில்லை..... அந்த மை இருளிற் சமூக அரக்கன்....தன் கடினமான நேர்மை நிரம்பிய அக்கினிக் கண்களை என் அநாதை உள்ளத்திற் பாய்ச்சினான். அச்சுவாலைக்கு என் மானிடச் சக்திகள் தீய்ந்து சாம்பலாய்ப் பறந்தன. இந்தப் பவித்திர கங்கைக்கரை ...தவறு...கங்கா கர்ப்பத்திற் சரணடைந்தேன். அவள் நம்மைப்போன்ற பெண்ணல்லவா? ஆதரவாய் அடைக்கலமளித்து, அமரத்துவத்தை யளித்தாள். அவளே என் வாழ்வின் சந்தேக வழிகளைச் சரிவரச் சீர் திருத்தினாள்.

"அவளுக்கே என் அநாதை வாழ்க்கையைச் சமர்ப்பணம் செய்தேன். இப்பொழுது அதில் எனக்கொரு கவலையுமில்லை. இன்று நான் சாசுவதமான அமரத்துவத்தில் என் குழந்தையுடன் சேர்ந்துவிட்டேன்.

"இந்த அநாதையின் சாரமற்ற துன்ப வாழ்க்கையை மறந்துபோகாதே அம்மா!" என்றது அதே குரல். மறுகணம் அந்த உருவம் அங்கு தென்படவில்லை.

* * *

"அந்த இரவு" இன்றும் என் உள்ளத்துள் செதுக்கிய கற்சுவரைப்போல் மறையாமலிருக்கிறது. இந்த அபாக்கிய வதிகளுக்குச் சமூகத்தில் ஆதரவு கிடைக்குமா? ஆசார சீலர்களென்று சொல்லிக்கொள்பவர்கள் அநாதைப் பிணங்களுக்கு மோக்ஷம் அளிப்பார்களா? ஒரு மனமே இது என்ன உலகம்.

238-வது புடவைக் கட்டுப்பாட் டறிவித்தல்

விற்பனைக்கு புடவைகள் கிடைப்பதற்குப் பல நாட்களின் முன் மொத்த வியாபாரக் கடைகளுக்குமுன் ஒழுக்குவரிகள் (queues) ஆக்கப்படுகின்றன. தகவலாலயத்தில் (Information Bureau) உள்ள விளம்பரப் பலகையில் சரக்குக் கிடைக்குமென விளம்பரம் போடப் பட்டிருந்தாலல்லாமல் ஒழுக்குவரிப் புகுவச்சீட்டுக் கொடுப்பதற்கு வேறு ஒழுக்குவரிகள் அங்கீகரிக்கப்படமாட்டா என்பதைச் சில்லறை வியாபாரிகள் அறிந்து கொள்ளவேண்டும்.

ஈ. ரெட்ரிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 4-5-1946 [2757]

32-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

தெருவிற்பனையாளர்

1945-ம் ஆண்டின் 34-ம் பாதுகாப்புப் பிரமாணங்களின் (புடவைக் கட்டுப்பாடு) படி தெரு விற்பனையாளராகப் புடவைக் கட்டுப்பாட்டுத் தகுதிப் பத்திரம் (லைசன்ஸ்) உடையோர் தங்கள் கூப்பன் கணக்கு, பட்டியல், வில்புத்தகம், எஞ்சிய கூப்பன் என்பவற்றைக் காலி, களுத்துறை, கொழும்பு, குருநாகல், கண்டி, நுவரெலியா, வதுளை, யாழ்ப்பாணம் கோட்டகங்களில் (டிஸ்திறிக்) உள்ள தெருவிற்பனையாளர் அவ்வவ்விட உதவிப் புடவைக் கட்டுப் பாட்டதிகாரிகட்கும் ஏனையோர் அவ்வப்பிரிவு உண்ணேக்காளருக்கும் (இன்ஸ்பெக்டர்) ஒவ்வோர் மாதமும் யாதாவதோர் திங்கட்கிழமை சமர்ப்பிக்கும்படி கட்டளையிடுகிறேம்.

ஈ. ரெட்ரிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
27-5-1946. [2758]

விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையில் கூடும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 2418/P இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1946-ம் ஆவணி மீ 8-ம் திகதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் பின்னர் காணும் விதம் மூன்று தவணைகளாகப் பிரிக்கப்பட்டு 1946-ம் ஆண்டு ஆனிமீ 29-ம் வ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தத் தவணைக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப்பங்காளருக்குள்ளும் பங்காளர் கேள்விக்காரராக இல்லாவிட்டால் மறுபேர்களுக் கிடையிலும் அதியுயர்ந்த கேள்விக்காரனுக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

புலோலி கிழக்கு
1. வல்லிபுரம் தர்மலிங்கமும்
2. பெண் பாக்கியமும்
வக்ழகாளிகள்

புலோலி கிழக்கு
தாமு இராமசாமியும் மறுபேரும்
எதிராளிகள்

ஆதனம்

புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சி யிறை கொம்மாண்டி தோட்டம் நிலைப்பரப்பு 5. குளி $3\frac{1}{32}$. இது 1946-ம் ஆண்டு வைகாசி மீ 10-ம் திகதி 272-ம் இலக்கத்தில் உலாந்தா ப. சீவரத்தினத்தால் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி 1-ம், 2-ம், 3-ம் தண்டுகளாக இருக்கின்றன. இதில்

(1) 1-ம் தண்டுக்கு நிலைப்பரப்பு 1. குளி $13\frac{4}{32}$. எல்லை: கிழக்கு, 2-ம் தண்டு. வடக்கு ஒழுங்கை. மேற்கு, வேலன் பெண் கண்ணிக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். தெற்கு, முருகேசு பெண் செல்வரத்தினத்தக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும். பெறுமதி ரூபா 180/-

(2) 2-ம் தண்டுக்கு நிலைப்பரப்பு 1. குளி $13\frac{4}{32}$. எல்லை: கிழக்கு, 3-ம் தண்டு. வடக்கு, ஒழுங்கை. மேற்கு, 1-ம் தண்டு. தெற்கு முருகேசு பெண் செல்வரத்தினத்தினத்தக்கும்மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும். பெறுமதி ரூபா 240/-

(3) 3-ம் தண்டுக்குநிலைப்பரப்பு 1. குளி $13\frac{4}{32}$. எல்லை: கிழக்குல் தெற்கும் முருகேசு பெண் செம்வரத்தினத்தக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். வடக்கு, ஒழுங்கை. மேற்கு, 2-ம் தண்டு. இது முழுவதும் பெறுமதி ரூபா 205/-

S. C. Kanagasabai
கொம்மிஷனர்
புலோலி கிழக்கு, 14-5-46

யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்
ரூபா 34,36700. 100ரூபா வீதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்று 1 ரூபா வீதமாக 75 மாச காலத்திற்கு மாதந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விதத வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட கேமப்பணம்:
கேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "ராஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிகுப்பர்

(2734)



— ஒவ்வொன்றும் எவ்வளவு செலவுள்ளது

ஆம். இம்மாதிரியாகச் செய்ய விடுவீர்களானால் அந்த வண்ணன் உங்களை கடத்திற்குள்ளாக்குவான். இந்தக்காலத்து விலையில், அவன் கிழிக்கும் பொருள்களுக்குப் பதிலாக வாங்குவதற்கு உங்களுக்கு எவ்வளவு செலவாகுமென்பதை யோசித்துப்பாருங்கள். அவனின் நாசமாக்கும் முறையை இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டாம். ஆடைகளையும், வீட்டு உடைகளையும், சிறிதளவேனும் பழுது ஏற்படும் என்ற ஐயமின்றி, 'சன்லைட் சோப்பை உபயோகித்து மிச்சம்பிடிக்கும் முறை'யால் அழகாகத் தோய்த்துவிடமுடியும். அதைவிட ஒரு இலகுவான முறை; அடிக்கத்தேவையில்லை; கடினமாகத் தேய்க்கவேண்டியதில்லை. கீழே குறிப்பிட்டிருக்கும் சாதாரண விவரங்களை வாசிக்கவும்.

உங்கள் வேலைக்காரனுக்குச் 'சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும்' முறையைக் கற்பியுங்கள்



1. ஆடைகளைத் தண்ணீரில் நன்றாக ஊறவையுங்கள்.
2. ஆடைகள்மீது — அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக — சன்லைட்டை நன்றாகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிகுதலாகத் தப்புதல்வேண்டும். அவைகளை அடிக்கவேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றல்' தரை அழுக்கை இளக்கிவிடுத்தலிடும்.
4. நன்றாக அலசிக்கழுவவும். அழுக்கு சன்லைட் தரையிலேயே இருக்கிறபடியால் அலசிக் கழுவிவிடவும். நன்கு அழுக்கடைந்த ஆடைக்குத் திரும்பவும் சோப் போடவேண்டும்



சன்லைட்சோப்
ஆடைகளைப் பாதுகாக்கின்றது

S. 72-169 LEVER BROTHERS (CEYLON) LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

THE EELAKESARI

Largest Circulation in Ceylon, India & Malay States

Vol. 16 | Chunnakam, Sunday May, 19, 1946 | No. 41

நற் சுகத்திற்கு

எங்களிடம் P. S. R. சந்தனத்தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2741]

33-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

பாதுகாப்புப் பிரமாணங்களின் (புடவைக் கட்டுப்பாடு) படி எமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி பெனியன் விலையைக் குறிக்கும் 12-வது கட்டளையை பின்வரும் கட்டளை (proviso) விலை இடாப்புக்கு ஈற்றிலும் விளக்கக் குறிப்புக்கு மேலும் இடப்பட்டு எம்மாற் திருத்தஞ் செய்யப்படுகிறது.

"எப்படியாயினுங் கட்டுப்பாட்டதிகாரி, ஒரு வியாபாரி சரக்கை இறக்குமதி செய்யுமுன் மாதிரிகளை (சாம்பிள்) கட்டுப்பாட்டதிகாரிக்குச் சமர்ப்பித்து விற்கப் போகும் சில்லறை விலையை ஏற்றுக்கொள்ளுமிடத்து அவ்வகையான பெனியன்களை 4-வது கலத்திலுள்ள விலையிலும்கூட விற்க அனுமதிக்கப்படலாம்."

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 7-5 1946. [2759]

241-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

198-ம் இலக்கப் புடவைக்கட்டுப்பாட்டு அறிவித்தல் சார்பாகப் பெலியட்டாவிலுள்ள G. P. வின்சென்ற் சில்வா என்ற மொத்தப் பங்கீட்டு வியாபாரியின் வியாபார நாள் சனிக்கிழமை காலை 9 மணியாகும். முன்னர் விளம்பரஞ் செய்த மாதிரி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கல்ல.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 9-5-1946 [2762]

35-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

சாரங்கள் கம்பாயங்கள்

கொழும்பு நகராண்மைக் கழக எல்லையுள் சாரங்கள், கம்பாயங்கள் இறக்குமதி செய்வோர் தங்களது பட்டியலின் 3-ல் 2 பங்கை வெளி ஊர்ச் சில்லறை வியாபாரிகட்கு அல்லது அதிகாரம் பெற்ற வெளி ஊர் மொத்த வியாபாரிகட்கு விற்பார்களாக. 15-வது கட்டளை இதனால் தளர்த்தப்படுகிறது.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 10-5-1946 [2761]

திரு. க. ஜெயரத்தினம்

அவுஸ்திரேலியாவிலுள்ள

மெல்போன் நகரத்தில் 5 வருட காலமாக நீர்ப்பாசன சாஸ்திர முறைகளில் விசேஷபயிற்சி பெற்றபின் திரு. க. ஜெயரத்தினம் கடந்த வாரம் ஊர் திரும்பியுள்ளார். இவர் காலஞ்சென்ற ஸ்ரீ வ. கனகரத்தினம் [வழக்கறிஞர் சாவகச்சேரி] அவர்களின் புதல்வன். வழக்கறிஞர் திரு. சி. சிவராசா அவர்களின் மைத்துனன்.

புதிய சம்பளத் திட்டம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரணமாக எவருமறிந்த உண்மை. இவ்வுண்மையை மந்திரியவர்களும் சம்பள விசாரணைச் சபையாரும் அறியாதது ஆச்சரியப்படத்தக்கது.

3. "லிகிதர்கள் தெரிவுப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுகின்றவர்கள் திறமை வாய்ந்தவர்களாகையால் அவர்கட்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கலா" மென்பது. சுவபாஷா ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்குச் சேரும்போது மிகக்கடுமையான தெரிவுப் பரீட்சைகளின்மூலம் தெரிவு செய்யப்படுகிறார்களென்பதையும் அவ்விதம் தெரிவு செய்யப்பட்ட பின்னரும் 3 ஆண்டுகட்குத் தம் தொழிலுக்குரிய கல்வியைப் பயிலுகிறார்களென்பதையும் கல்வி மந்திரியவர்கள் அறிவார்களா?

"ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட வர்களைப் போல் சுவபாஷைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கட்கு அதிக சம்பளம் கொடுக்கமுடியாது" என்பது. அரசியல்மொழி யறிந்திருக்குமொன்றைத் தவிரப் பாடங்களும் பாடவிதானங்களும் ஒன்றேயென்பதைத் தெருட்டிய பின்னரும் மந்திரியவர்கள் தமது பிடியை நழுவவிடவில்லை. சுவபாஷா ஆசிரியர்களில் ஆங்கிலம் கற்றவர்களின் நிலையை யெடுத்துக் காட்டினால் யோசித்துச் செய்வோம் என்கிறார். ஆசிரியர்களுக்கு இது ஒரு கடுமையான சோதினைகாலம். இதில் வெற்றி பெறுவதற்கு வழிவகைகளைத் தேடுவது அவர்களைப் பொறுத்தது.

17.5.46. —S. R. கந்தசாமி

நீர்வைக் கந்தசாமிகோவில் நிர்வாகமும் பரிபாலனமும்

இக்கோயில் இப்போது மிகவும் மோசமான நிலையை அடைந்துவிட்டது. பொதுசனங்களால் தெரியப்படாத மனேஜர் இல்லாமையே இதற்கு முக்கிய காரணமாகப் பேசப்படுகின்றது. இப்போது காரியங்களை நடப்பிக்கின்ற ஒருவர்மேற் பொதுசனங்கட்கு வெறுப்புத் தோன்றுகின்றது. இதனால் சுவாமி காவுதற்குக்கூட முற்படுவார் மிகக் குறைவாக இருக்கின்றது. தெருத் திண்ணையில் உறங்குவோரை அழைத்துவந்து காவச்சொன்னால் அவர்கள் வேணுமென்றே சுவாமியைக் கீழே போட்டுவிடுகிறார்களாம். இதனால் திருவாசி சுவாமியின் அங்கங்கள் யாவும் பழுதடைகின்றன. கண்டவர்கள் எல்லோரும் கண்ணீர் வடிக்கின்றனர். என்ன அபாயம் தங்களுக்கு வந்து சேருமோ என்று அஞ்சுகின்றனர். குறித்த நிர்வாகியிடமிருந்து திறப்புக்கோர்வைகளைப் பறித்தார்களாம். இதனால் சுவாமிக்குச் செய்யவேண்டிய நித்திய நைமித்தியங்கள் தடைபெறப் பார்க்கின்றன. இது எவ்வளவு வெட்கக்கேடான காரியம். குறித்த நிர்வாகி பூனையைச் சாட்டி, புக்கையை உண்பவராய், இருக்கலாம். அல்லது கோவில் காணிகளின் வரும்படியைக் காணிக்கையை வீட்டுச் செலவிற்கு எடுப்பவராய் இருக்கலாம். ஆனால் அவர்மீது கொண்ட கோபத்தை சுவாமியில் சாதிப்பதா அப்படிச் செய்வது சேற்றின்மேற் கல்லெறிந்தால் அச்சேறு எறிந்தவர்மேல் படுவதை ஒக்குமன்றி வேறு ஒரு பிரயோசனமுமில்லை. தகுதியற்ற வரென்றால் நீங்கள் ஒற்றுமையாய் மகாசபையைக் கூட்டி உறுதி எழுத்தின்படி ஒரு மணியகாரனைத் தெரியலாமே? அப்பொழுது இந்தப் புதிய காரியஸ்தர் தாமே நீங்கிவிடுவாரல்லவா? இதையல்லவோ நீங்கள் செய்யவேண்டும். ஆனால் குறித்த ஒருவர் தன்னைத்தான் இவ்வளங் கொலங்கள் நிகழ்கின்றன என்பதை உணர்ந்தால் அவர் தானே விட்டு நீங்குவாராயின் மிகவுமோர் புண்ணிய காரியமாகும்.

இங்ஙனம்
சிவ—பத்தன்

இலங்கைச் சர்வகலாசாலை வித்வான் தத்துவ பத்திர வகுப்பு

இலங்கைச் சர்வகலாசாலை யில் 1946-ம் ஆண்டு யூலை மீ 1.ம் தேதி வித்வான் தத்துவ பத்திர வகுப்பு ஆரம்பமாகவிருக்கிறது. இவ்வகுப்பில் பூரண சித்தியெய்துவதற்கு மூன்று வருடம் கற்கவேண்டும். ஆயின் தொடர்ந்து மூன்று வருடங்களுக்குப் பலருக்குப் படிக்க வசதியீனங்களிருக்குமென்பதை உணர்ந்த அதிகாரிகள் ஒவ்வொரு வருடமுடிவிலும் விசேட பரீட்சை வைத்து சித்தியெய்தியோருக்குத் தாராதரப்பத்திரம் அளிக்க நிச்சயித்துள்ளனர்.

கீழ்க்காணும் தகைமைகளில் ஏதாவதொன்றுள்ளோர் யூன் மீ 4-ம் தேதி நடத்தப்படும் சர்வகலாசாலை விசேட பிரவேச பரீட்சையிற் சித்தியெய்தின் சர்வகலாசாலையிற் சேர்ந்து கற்க உரிமையுடையராவர்—:

(1) மற்றிக்குலேசன் பரீட்சை அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சை (2) ஆங்கில S. S. C. பரீட்சை அல்லது கேம்பிறிச் சீனியர் பரீட்சை (3) தமிழ் S. S. C. பரீட்சை (4) பயிற்றப்பட்ட தராதரப்பத்திரப் பரீட்சை (தமிழ்) பிரவேசப் பரீட்சைக்கு இரண்டு எழுத்துப் பாடங்களும் நேர்முகப் பரீட்சையுமிருக்கும்.

எழுத்துப் பரீட்சை 1. ஓர் வியாசமும், இலக்கியப் பொதுவிளக்கங்களும், இலங்கைச் சரித்திரம் அல்லது கலைவளர்ச்சி சம்பந்தமான வினாக்களும் (தமிழில்)

பரீட்சை II. தமிழை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல், ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்த்தல். கவனிப்பு. (3) அல்லது (4) தகைமையுடன் மாத்திரம் பிரவேசிக்க விரும்புவோர் ஆங்கில S. S. C. பரீட்சைப் பத்திரத்துக்குச் சமமான பாஷைப் பத்திரமொன்றுக்கும் விடையளித்தல் வேண்டும். சேர விரும்புவோர் சர்வகலாசாலைக்கு விண்ணப்பப்பத்திரம் இம்மாசம் 18-ம் தேதிக்குமுன் அனுப்பவேண்டும்.

இலங்கையிற் தேசிய கலை வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் வரவேற்கத் தக்கதே, ஆயின் செல்வாக்குள வர்களும் ஆங்கிலங் கற்றவர்களும் இதிற் சேர விரும்பார். ஏனெனில அவர்கள் B. A. B. Sc, பட்டதாரிகளாக வெளிக்கிளம்ப விரும்புவர். பணமுடையினால் தமிழ் மாத்திரம் கற்றோர் இதிற் சேரமாட்டாரோவெனின் அவர்களும் சேரமுடியாமலிருக்கிறது. முதலாவதாக இதிற் சேருவதற்கு ஆங்கில அறிவு தேவைப்படுகிறது. இரண்டாவதாக மூன்று வருடங்களுக்குக் கொழும்பில் இருந்து படிக்கப் போதிய பணம் அவர்களிடமில்லை. மாணவர்கள் இலவசமாகப் படிப்பிக்கப்படுவார்களேயன்றிச் சாப்பாடு, உடை போக்குவரவுச் செலவு முதலியனவற்றை அவர்களே பொறுத்தாக வேண்டும். இனித் தமிழ் ஆசிரியர்களாகவுள்ளோர் இதிற் சேர விரும்புவரோவெனின் அவர்களும் விரும்பார். அவர்கள் மூன்று வருடச் சம்பளத்தை இழக்க நேரிடும், அல்லாமலும் மூன்று வருடச் செலவுக்கும் வட்டிக்கே பணம் எடுக்க நேரிடும். இலவசக்கல்வி மூலம் இலங்கையின் அறியாமை இருளை அகற்றத் திட்டமிடும் மேதாவிகள் சர்வகலாசாலைப் படிப்பு மூலமே, தேசிய பாஷைகள் உயர்நிலையடையுமென்று திட்டமிட்டமை போற்றத்தக்கதே. ஆயின் அதற்கேற்ற வழி வகைகளைக் கையாளவேண்டும். இப்பொழுது சேவையிலிருக்கும் ஆசிரியர்களில் ஓர் குறித்த தொகையினரை வருடாவருடம் தெரிந்து அவர்களுக்கு மூன்று வருட முழுச்சம்பள லீவு கொடுத்துப் பயிற்றி வரலாம், அச்செயல் நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பேருதவியாயிருக்கும். ஆசிரியர்களுடன் ஓர் குறித்த அளவு தகுதியுள்ள மாணவர்களையும் தெரிந்து பயிற்றலாம், ஆயின் மாணவர் செலவு முழுவதையும் அரசாங்கமே பொறுக்கத் தயாராகயிருக்க வேண்டும். சுதேச பாஷை தெரிவிலே வெட்டுப்புள்ளிகளும் பெறுபேறுகளிலிற் கீழ்நிலையிலுள்ளவர்களே அவ்வாறுயின் சர்வகலாசாலை மூன்று வருடத்திட்டத்தை அரசாங்க உதவியின்றி எவ்வாறு முடிப்பர்? இலவசக் கல்வித் திட்டமிருப்பதனால் சுதேச பாஷை கற்கப் பலர் முன்வருவரென நினைப்பது பேதைமை. அத்திட்டம் நடத்தர வகுப்பினருக்குப் பயனளிக்குமன்றிக் கீழ் நிலையிலுள்ளவர்களுக்கு அதிக பயன் அளிக்குமெனக் காத்திருக்க இடமில்லை. தேசாபிமானம், பாஷாபிமானம் உள்ளவர்களும், இலங்கையின் தேசிய பாஷைகளே மேல்நிலை அடைய வேண்டுமென்று உள்ளபடி விரும்புகிறவர்களும், சுதேச பாஷை ஆசிரியர்களும், மாணவர்களும் அறிவைத் தேடுதற்கேற்ற வழிவகைகளைச் செய்ய முன்வர வேண்டும். இலங்கைச் சர்வகலாசாலை ஒருவருட முடிவில் வெளியேறுபவர்கள், இரண்டாம் வருடம் முடிந்து வெளிக்கிளம்புவோர், மூன்று வருடமும் முடித்துப் பூரண பத்திரத்துடன் வெளிக்கிளம்புவோர் வேதனங்கள் இவ்வளவிவ்வளவென வெளியிடுதல் நலம்.

ஏழாலை. இப்படிக்கு
12-5-46 இ. சபாரத்தினம்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

தேவை

ஏழாலை மேற்கிலுள்ள தனலட்சுமி ஐக்கிய பண்டகசாலைக்கு ஓர் விற்பனையாளர் தேவை. சம்பளம் ரூபா. 30—40. பிணை ரூபா 200. குறைந்தது 2 வருஷம் வியாபார அனுபவம் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரத்துடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு மனுச் செய்க. முடிவு தேதி 2-6.46.

காரியதரிசி
தனலட்சுமி ஐ. ப. சாலை
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (2763—ii)

237-வது புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல்

(புடவைப் புஸ்தகங்கள் பங்கீடு செய்தல்)

1946-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் புடவைப் புஸ்தகங்கள் பங்கீடு செய்தபோது பற்பல காரணங்களால் புஸ்தகங்களைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களின் விண்ணப்பங்கள் எமது அலுவலகத்துக்கும் கச்சேரிகட்கும் இன்னும் அனுப்பப்படுகின்றன. புடவைப் புஸ்தகங்கள் பெற்றுக்கொள்ளப் பொதுசனங் கட்குப் போதிய காலம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே புடவைப் புஸ்தகம் பெறுதற்குப் புதிய விண்ணப்பங்கள் 1946-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதிக்குப் பின் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 2-5-1946 [2756]

வாலிபர் சங்கம்

தென்மராட்சி வாலிபர் சங்கத்தின் இரண்டாவது பொதுக் கூட்டம் 15-5-46 புதன்கிழமை மாலை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நிகழ்ந்தது. ஆசிரியர் ஸ்ரீ K. நேசையா M. A. அவர்கள் "இக்கால உலகம்" என்னும் விஷயம் பற்றியும் ஸ்ரீ R. T. சுப்பிரமணியம் "நாளைய உலகம்" என்னும் பொருள் பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 1941

நல்லூர்

1. T. வயித்திலிங்கம் கந்தையா
2. பெண் சரஸ்வதி

வழக்காளிகள்

சுண்டிக்குளி:

1. கிளிமென்று செபமலர்
2. கிறிஸ்தோபர் நீக்கிலாஸ்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் 1941-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் காலு ஆண்டுக் காணிகளை, 1946-ம் ஆண்டு ஆனி மாதம் 10.ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 1-ம் காணியும் அன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் 2,3, 4-ம் காணிகள் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1146-40-ம், இதில் ரூபா 800-க்கு 19-3-45 திகதி தொடக்கம் 26-9-45 திகதி வரைக்கும் 100-க்கு 12½ வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் மூழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 9 வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 181-97.

காணிகளின் விபரம்:

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூரிறை "இளுவன் சுடுகாடும், பெரிய புலத்துவயலும்" நிலப்பரப்பு ஒன்றும் குளி $11\frac{49}{128}$—ம் கொட்டிலும் மற்றும் பயிர்களும் எல்லை: கிழக்கு, ரோட்டு. வடக்கு, அத்தோனிப் பிள்ளை யோனின் ஆதனம். மேற்கு, சந்தியோ தம்பிராசாவின் ஆதனம். தெற்கு, ஒழுங்கை. இதடங்கலும்.

(2) மேற்படி டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை கிழக்கிறை "களகண்டாளை" நிலப்பரப்பு $24\frac{1}{2}$-ம் கிணறும் செப்பயிர் வான்பயிர்களும் எல்லை: கிழக்கு, வேலுப்பிள்ளை செல்வராயகத்திற்கும் பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் விசுவநாதர் சிற்றம்பலத்திற்கும் பெண் தங்கத்திற்கும் தம்பு பொன்னம்பலத்திற்குமுரிய ஆதனம். தெற்கு, ஒழுங்கை. இதில் சொரியலாய் காலில் ஒருபங்கும், குறித்த கிணற்றிலும் தூர்வையிலும் பங்கும் வழிவாய்க்காலும்.

(3) மேற்படி தெல்லிப்பழை கிழக்கிறை "சதாயன் கலட்டி" நிலப்பரப்பு 70-ம் பயிர்களும், எல்லை: கிழக்கு, வயிரவன் கதிரித்தம்பிக்கும், விஜயித்தம்பி பெண் சிவக்கொழுந்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, அப்புத்துரை இராசாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கு, விசுவநாதர் சிற்றம்பலத்திற்கும் பெண் தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, இதம்பரப்பிள்ளை பெண் கணேசம்மா யெயமணிக்கும் செல்வராயகம் பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் காலில் ஒருபங்கும் அதற்குரியவைகளும்.

(4) மேற்படி தெல்லிப்பழை கிழக்கிறை "பதகாளை" நிலப்பரப்பு $28\frac{1}{2}$-ம் பயிர்களும், எல்லை: கிழக்கு, சின்னவன் சதாசிவத்திற்கும் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு, சங்காரி மூத்தாருக்கும் பெண் சின்னம்மாவுக்கும்: காசி கைம்பெண் மூத்தநம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் காலில் ஒரு பங்கும் அதற்குரியவைகளும்.

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை.
17-4-46. [2764]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு 'தீநமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், தீநமகள் அழுத்தகத்தில் 1946 மேமீ 19ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org